## மணங்கமழும் மங்கல விழா - 2011

# ஆய்வரங்கக் கட்டுரைகள்

பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய
சமூக அபிவிருத்தி ஒன்றியம்

## மண்கமழும் மங்கல விழா – 2011

# ஆய்வரங்கக் கட்டுரைகள்

பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய
சமூக அபிவிருத்தி ஒன்றியம்

## ஆய்வுக் கட்டுரைகள்

"படுவான்கரைப் பிரதேசத்தின் பொருளாதார முன்னேற்றத் திற்கான திட்டமிடலும் செயற்பாடுகளும்"

**- திரு. பொ. நகுலேஸ்வரன்**

"ஈழத்து தமிழியல் ஆய்வு முயற்சிகளும் க.மகேஸ்வரலிங்கமும்"

**- பேராசிரியர் செ. யோகராசா**

"மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் பரிகாரியார்கள் - ஒரு தேடல்"

**- திரு. முருகு தயாநிதி**

"மண்முனை தென்மேற்குப் பிரதேசக் கல்வி வளர்ச்சியும் அது எதிர்நோக்கும் சவால்களும்"

**- திரு. சி. குருபரன்**

**குறிப்பு :-** இந்நூலில் இடம்பெறும் ஆய்வுக் கட்டுரைகளுக்கு அக் கட்டுரைகளின் ஆசிரியர்களே முழுப் பொறுப்பானவர்க ளாவர். கட்டுரைகள் சிதறி தனித்தனியாகா வண்ணம் அவற்றை உள்ளவாறே தொகுத்த உரிமையே பட்டிப்ப ளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்துக்கு உண்டு.

# தலைமையுரை

பட்டிப்பளைப்பிரதேசம் மட்டக்களப்பில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். கி.பி 4ம் நூற்றாண்டில் கலிங்க இளவரசி உலக நாச்சியால் மண்முனையை மையமாகக் கொண்ட ஒரு அரசும் அரசிருக்கையும் அமைந்த பிரதேசமாகப் பட்டிப்பளை விளங்குகின்றது. இந்த ஆட்சி மையம் வாவியின் இரு மருங்கையும் உள்ளடக்கியிருந்தது.

இப்பிரதேசத்தின் இன்னொரு பெருமை திருப்படைக் கோயில்களில் முதற்படையாக விளங்கும் திருத்தான்தோன்றீச்சரம் அமையப்பெற்றிருத்த லாகும். இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சுயம்புலிங்கப் பெருமானுக்கும் உலக நாச்சியாலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டமை மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் கூறும் உண்மையாகும். கி.பி 13ம் நூற்றாண்டில் இலங்கை முழுவதை யும் ஆட்சி புரிந்த மாகோன் என்னும் மன்னனால் அரனூழியம் வகுக்கப்பட்ட பெருமைக்குரியதும் அவனது உபராசனான குளக்கோட்டனால் திருப்பணிகள் ஆற்றப்பட்டதுமான பெருமைக்குரியதுமாக இத்தலம் விளங்குகின்றது. மட்டக் களப்பு வரலாறும் சமுக அமைப்புக்களும் ஆய்வு செய்யப்படவேண்டுபவர்க ளுக்குரிய ஓர் ஆய்வுத் தளமாகமாகவும் விளங்குவது திருத்தான்தோன்றீச்சர மாகும். மாகோன் வகுத்த சமூகக் கட்டமைப்பு இவ்வாலயத்தின் அரனூழியத் துடன் தொடர்பானதும் சமூகவியல் ஆய்வாளருக்கு ஒரு பொக்கிஷமாகவும் விளங்குவதுமாகும். மட்டக்களப்பு சமூகம் முழுவதும் பங்குகொள்ளும் வரிசை முட்டி கூறும் வைபவமும் அனைத்துச் சமூகப் பிரிவினரும் ஒன்றுபடும் நிகழ் வும் இவ்வாலயத்தின் பிரதான நிகழ்வாக இருந்துவந்துள்ளது.

இலங்கையில் தமிழ் மக்களது கல்வி, கலை, கலாசார, பொருளாதார பண்பாட்டு நிலைமைகள் இன்று ஒரு தாழ்வு நிலையை நோக்கியுள்ள இன் றைய சூழலில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்கள், பட்டதாரிகள், நலன் விரும்பிகள் அனைவரும் இணைந்து கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம் ஒன்றினை அமைத்திருப்பது காலத்தின் தேவையாகும். தொடர்ந்து பல்வகை அனர்த்தங்களுக்குட்பட்ட நமது மக்களது நிலையை உயர்த்துவதற்கு இவ்வாறான அமைப்புக்களின் உருவாக்கமும் அவற்றின் தொண்டும் மிக மிக வேண்டப்படுவதொன்று.

இவ்வொன்றியத்தின் முயற்சியினால் இன்று ஓர் ஆய்வரங்கும் கலை நிகழ்வும் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பது இப்பிரதேசத்தில் ஒரு எழுச்சியை ஏற்படுத்தும் நிகழ்வென்றே கருதுகின்றேன். எதிர்காலச் சந்ததிக்கு எமது பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கையளிக்கும் பிரதான கடமையை இப்போ தைய சமூகம் துல்லியமாக முன்னெடுக்கவேண்டியது பாரிய சமூகக் கடமை யாகும். இது முக்கியமாக இன்றைய இளைஞர்களது கையில் தான் உள்ளது.

இப்பிரதேசத்தில் உள்ள சகல கிராமங்களையும் ஒன்றினைத்து இவ்வொன்றியம் செயற்படுவது ஒரு முன்மாதிரி யென்று கூறலாம்.

இப்பொழுது இடம்பெறவுள்ள ஆய்வரங்கு நான்கு பிரதான கருப் பொருட்களில் இடம்பெறுகின்றது. கல்வி, பொருளாதாரம், கலை, பண்பாடு, மகிழை மகேசனின் ஆய்வு முயற்சிகள் எனும் நான்கு விடயங்கள் ஆய்வுக் குட்படுத்தப்படுகின்றன. திரு.சி.குருபரன் அவர்கள் கல்வி தொடர்பான தனது ஆய்வைச் சமர்ப்பிக்கவுள்ளார். கடந்த பல ஆண்டுகளாக கல்வி அபிவிருத் திக்காக அருந்தொண்டாற்றிவருபவர் திரு.குருபரன் அவர்கள்.

பொருளாதாரம் சார்ந்த ஆய்வைச் சமர்ப்பிக்க இருப்பவர் முதலீட்டுச் சபையின் பிரதிப் பணிப்பாளர் திரு.பொ.நகுலேஸ்வரன் அவர்களாவார். இவ் வாய்வுக்குத் தகுதியான ஒருவரை ஒன்றியம் தெரிவு செய்திருப்பது பாராட்டுக் குரியது. கலை, பண்பாடு தொடர்பான ஆய்வை நிகழ்த்தவுள்ளவர் முருகு தயாநிதி அவர்கள். கல்வி, கலை, பண்பாட்டுத்துறையில் நீண்டகாலம் தொண் டாற்றிய அனுபவம் வாய்க்கப் பெற்றவர் தயாநிதி அவர்கள். கலை, பண்பாட்டு ஆய்வுக்குப் பொருத்தமான ஒருவர் தனது ஆய்வைச் சமர்ப்பிக்கவுள்ளார்.

அடுத்ததாக இடம்பெற இருக்கும் ஆய்வு பேராசிரியர் செ.யோகராசா அவர்களது ஆய்வாகும். அமரர் மகிழை மகேசனின் ஆய்வு முயற்சிகள் தொடர் பாக அவரது ஆய்வு அமை கின்றது. மகிழை மகேசன் இப்பிரதேசத்தின் முதற்பட்டதாரியும் கலை, கலாசார, பண்பாட்டு, வரலாற்றுத்துறை சார்ந்த ஆய்வுகளில் தடம் பதித்தவருமாவார். அவர் விட்டுச் சென்ற ஆய்வு முயற்சிக ளைத் தொடரவேண்டியது இன்றைய தலைமுறையினரின் தலையாய கடமை யாகும். இப்பிரதேசம் சாாந்த ஆய்வு முயற்சிகளின் முன்னோடியான அமரர் மகேஸ்வரலிங்கம் அவர்கள் தொடர்பாக எங்கள் பேராசிரியரவர்கள் தனது ஆய்வைச் சமர்ப்பிக்க இருப்பது சாலவும் பொருத்தமானதாகும்.

இவ்வாய்வுக்கருத்தரங்கு எமது பிரதேசத்தின் பல அம்சங்களில் ஒரு பாரிய விழிப்பை ஏற்படுத்தும் என நான் கருதுகின்றேன். இந்த அபிவிருத்தி ஒன்றியத்தின் இம்முயற்சி தளர்ச்சியின்றி வலுவுடன் தொடரவேண்டுமென்பது அனைவரதும் விருப்பமாகும். ஒன்றியத்தின் முயற்சிகள் ஆழமாகவும் அகலமா கவும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவேண்டும். பல முன்மாதிரியை மற்றைய பிரதேசங்களுக்கும் கட்டவேண்டும் என்று கேட்டு எனது தலைமையுரையை நிறைவு செய்கின்றேன்

**பேராசிரியர் மா. செல்வராஜா**
பீடாதிபதி, கலை கலாசார பீடம் /
தலைவர், கல்வி, பிள்ளை நலத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

# படுவான்கரைப் பிரதேசத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டமிடலும் செயற்பாடுகளும்

திரு.பொ.நகுலேஸ்வரன்

படுவான்கரை பிரதேசம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பிரதேசமாகும். இங்கு வாழ்கின்ற அனேகமான மக்கள் வேளாண்மைச் செய்கையை வாழ்வாதார தொழிலாகக் கொண்டுள்ளனர். இங்குள்ள மக்களது பொருளாதாரமானது நெற்செய்கை, சேனைப்பயிர்ச் செய்கை, விலங்கு வளர்ப்பு, பால் உற்பத்தி, காட்டுத்தொழில், மீன்பிடி, சிறு கைத் தொழில் மற்றும் அரசதுறை வேலைவாய்ப்பு என்பவற்றில் தங்கியுள்ளது.

இங்கு அரசதுறை வேலை செய்பவர்கள் தவிர்ந்த ஏனைய அனைத் துத் துறையினரும் பருவகால வேலை செய்பவர்களாகவேயுள்ளனர். இதனால் வேலையின்மை, கீழுழைப்பு, வறுமை, என்பன பிரதான வெளிப் பாடுகளாகக் காணப்படுகின்றன. சில வேளைகளில் அதிக மழை, வரட்சி, நோய்ப் பாதிப்பு போன்றவற்றினால் இவர்களது விவசாயத்துறை மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றது.

எனவே படுவான்கரைப் பிரதேச மக்களது பொருளாதார நிலை மையானது ஓர் நிச்சயமற்ற தளம்பல் நிலையுடன் கூடிய துறையாக இருப்பதனால் இத்துறையை ஓர் முன்னேற்றகர மானதாகவும் நீண்டகால வளர்ச்சியுடன் கூடிய துறையாகவும் மாற்றியமைப்பதற்கான ஆக்கபூர்வ மான திட்டங்களை வகுத்து செயற்படுத்துவது இன்று ஓர் மிகவும் இன் றியமையாத தேவைப்பாடாகவுள்ளது.

இந்த வகையில் இங்கு காணப்படுகின்ற வளங்களை அதாவது தேவையான நிலவளம், நீர், செறிவான ஊழியம், விவசாயம், விலங்கு வளர்ப்பு, பண்ணைத்தொழில், மீன்பிடித் தொழில் போன்றவற்றுக்கு உகந்த சாதகமான சூழல் போன்றவற்றை சிறந்த முறையில் திட்டமிட்டு செயற் படுத்தி அவற்றிலிருந்து உச்சப் பயனைப் பெற்றுக்கொள்வதன் மூலமாக நாம் இந்த இலக்கை அடைந்து கொள்ளாம்.

விவசாயத்துறையை எடுத்துக்கொள்வோமாயின் இங்கு வாழ் கின்ற விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கையுடன் தொடர்புடைய நவீன தொழி நுட்ப அறிவு புகட்டப்படுதல் மிகவும் முக்கியமானதாகும். கிழக்குப் பல்கலைக் கழகம், விவசாயக்கல்லூரிகள், ஏனைய சமூக நிறுவனங்கள் என்பவற்றை இங்குள்ள விவசாயிகள் சங்கம் தொடர்புகொண்டு இதைச் செய்யலாம்.

பெரும்பாலான விவசாயிகள் இங்கு பெரும்போக நெற்செய்கையிலேயே தங்கி இருக்கின்றனர். பெரும்போக நெற்செய்கைக் காலங்களில் நிகழும் இயற்கை அழிவுகளால் இவர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். எனவே இவர்களை கணிசமான அளவு சிறுபோக நெற்செய்கைக்கு நகர்த்துவது மிகவும் பிரயோசன மானதாகும். இதற்கு உகந்தவிதத்தில் செய்கைபண் ணப்படும். நிலங்கள் திருத்தியமைக்கப்பட்டு நீர்ப்பாசன வசதியை ஏற்படுத் தக்கூடிய சிறிய பெரிய குளங்கள் புனரமைப்புச் செய்யப்படுதல் அவசியம் இதற்கு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் நாடப்படலாம்.

சேனைப்பயிர்ச்செய்கையைப் பொறுத்தமட்டில் இத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு சிறந்த தொழிநுட்ப அறிவு புகட்டப்படுதல் அவசிய மானதாகும். சேனைப் பயிர்செய்கையையும் ஒரு போகத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் இரண்டு மூன்று போகங்களில் செய்கை பண்ணக் கூடிய விதத்தில் நீர்த்தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் சிறிய குளங்கள் மற்றும் ஆழ்கிணறுகள் என்பவற்றை அமைப்பது அவசிய மானதாகும். சேனைப்பயிர் செய்கையில் சோளம், மரவள்ளி என்பவற்றுடன் சந்தையில் கூடிய விலையில் விற்கக்கூடிய பிரயோசனமான பழவகை, தானியவகை, கிழங்குவகை, இலைக்கறிகள், மரக்கறிகள், வாசனைத் திர வியங்கள், வெங்காயம், மிளகாய், மூலிகை வகைகள் போன்றவற்றைச் செய்கை பண்ணுவது கூடிய பலனைக் கொடுக்கும் பல்கலைக்கழகம், கல்லூரிகள்,என்பவற்றுடன் இணைந்து மண்பரிசோதனை மேற்கொள்ளப் படுவதுடன் சிறந்த தொழிநுட்ப அறிவு பிரயோகிக்கப்படுவதன் மூலம் இது நிகழ்த்தப்படலாம்.

விலங்கு வளர்ப்பைப் பொறுத்தமட்டில் இங்கு மாடு மற்றும் ஆடு வளர்ப்பு என்பன பிரதான இடம் பெறுகின்றன. கோழிப்பண்ணைகள் மற்றும் பன்றி வளர்ப்பு என்பனவும் உள்ளன.படுவான்கரைப் பிரதேசத்தில் பால் உற்பத்தியானது முக்கிய இடம்பெறுகின்றது. இங்கு பசுப்பால், எருமைப்பால் என்பன கிடைக்கக் கூடியதாகவுள்ளன.

படுவான்கரைப் பிரதேசத்திலிருந்து பெறப்படும் உற்பத்திப் பொருட் களுக்கு இங்கு ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட சந்தை வாய்ப்பு வசதி இல்லா மல் இருப்பது பெரும் குறைபாடான விடயமாகவுள்ளது. இதனால் இங் குள்ள விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை மிகவும் குறைந்த விலையில் விற்பனை செய்வதுடன் உரிய பலனையும் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளனர். எனவே இங்குள்ள சங்கங்கள், இளைஞர் அமைப் புக்கள் போன்றன அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் உதவி யுடன் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட சிறந்த சந்தை வசதியை ஏற்படுத்தி விவசாயிகளின் உற்பத்திகளை நியாயமான முறையில் கொள்வனவு

செய்து வெளி இடங்களுக்கு விற்பனை செய்யலாம். அல்லது அவற்றைப் பதனிட்டு இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை போன்றவற்றின் உதவி யைப் பெற்று அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய லாம்.

இங்குள்ள அனேகமான விவசாயிகள் தனியார் முதலாளிகளிட மிருந்து தங்களது பயிர்களுக்கு தேவையான விவசாய உரம், கிருமிநா சினி, களைநாசினி போன்றவற்றைக் கடனடிப்படையில் பெற்று பின்னர் தமது விளை நெல்லை அவர்களுக்கு கொடுத்து அக்கடனை ஈடுசெய்கின் றனர். இதனால் மிகவும் பாடுபட்டு பெறப்படும் அவர்களது நெல்லுக்கு சிறந்த விலை கிடைக்காமல் போகின்றது. இங்கு தனியார் முதலாளி மார்களே நன்மையடைகின்றனர். எனவே இங்கு விவசாயிகளுக்குத் தேவை யான விவசாய இரசாயனப் பொருட்கள் கமநலச்சேவை நிலையம் மற் றும் விவசாய சங்கங்கள் போன்றவற்றினால் விவசாயிகளுக்கு வழங்கப் பட்டு அக்கடனை அடைப்பதற்கான நெல்லானது விவசாயிகளிடமிருந்து நியாய விலையில் கொள்வனவு செய்யப்படலாம். மேலும் விவசாயிக ளுக்கு சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களது பயிர்ச் செய்கைக்குத் தேவையான மூலப் பொருட்களை தமது சொந்த பணம் கொடுத்து வாங்கும் விதத்தில் அவர்களை மாற்றுதல் வேண்டும்.

இங்குள்ள விவசாயிகள் நாளாந்தம் தமது உற்பத்திப் பொருட்க ளான அரிசி, இலைக்கறிவகை, மரக்கறிகள், தானியங்கள், கிழங்குவகை, பழங்கள், பால், தயிர், மற்றும் விறகு போன்றவற்றை எழுவான்கரைப் பகுதிகளுக்கு எடுத்துச் சென்று மிகவும் குறைந்த விலையில் அவற்றை விற்பனை செய்துவிட்டு பெறப்பட்ட பணத்தின் மூலம் போசணை குறைந்த உணவுப் பொருட்கள் மற்றும் பிரயோசனம் குறைந்த ஏனைய பாவனைப் பொருட்கள் போன்றவற்றை வாங்கி வருகின்றனர். இதனால் இவர்கள் பாதிக்கப்படுவதுடன் எப்படித்தான் கஷ்டப்பட்டு உழைத்தாலும் சேமிப்பு இன்றி தொடர்ந்தும் வறிய மக்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

எனவே இங்குள்ள இளைஞர் கழகங்கள், சமூக அமைப்புக்கள் என்பன இவ்வாறான நடவடிக்கைகளைத் தடுத்து அவர்களுக்கு தெளிந்த அறிவைப் புகட்டுவதுடன் அவர்களது விற்பனைப் பொருட்களை நியாய விலையில் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய ஆக்கபூர்வமான நடவ டிக்கைகளை மேற்கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

படுவான்கரைப்பிரதேசத்திலுள்ள விவசாயிகளின் பால் குறைந்த விலையில் வெளிநபர்களுக்கு விற்கப்படுகின்றது. இது தவிர்க்கப்படுதல் வேண்டும். இங்குள்ள மக்கள் தங்களது உற்பத்திப் பாலை வெளியாருக்கு

விற்பனை செய்து (குறைந்த விலையில்) மீண்டும் அதை பால்மா பக்கட்டுக்களாக வெளியாரிடமிருந்து கூடியவிலை கொடுத்து வாங்கி பயன்படுத்துகின்றனர். இது நிறுத்தப்படுதல் வேண்டும். படுவான்கரைப் பிரதேசத்தில் பாற்பண்ணைகள் பால் பதனிடும் தொழிற்சாலைகள் என்பன அமைக்கப்பட்டு இவர்களது பால் நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படுவதுடன் பதனிடப்பட்ட பால் மீண்டும் இவர்களது பாவனைக்கு வழங்கப்படுதல் வேண்டும். இதற்கு தனியார் முதலீட்டாளர்கள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றோரிடமிருந்து நிதியுதவிகள் பெறப்பட்டு இவை மேற்கொள்ளப்படலாம்.

படுவான்கரைப் பிரதேசத்தில் மிகவும் சிறியளவிலேயே கோழிப் பண்ணைகள் மற்றும் விலங்குப்பண்ணைகள் என்பன பேணப்பட்டு வருகின்றன. இங்குள்ள பரந்த நிலப்பரப்பு ஊழிய வசதிகள், நீர் மற்றும் விலங்கு உணவு வசதிகள் என்பவற்றை அடிப்டையாகக் கொண்டு பேரளவில் இப்பண்ணைகள் செய்யப்படலாம். இவற்றின் மூலம் படுவான் கரைப் பிரதேசம் மற்றும் அதற்கு வெளியே காணப்படுகின்ற இறைச்சி மற்றும் முட்டைத் தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்யப்படக்கூடியதாக இருப்பதுடன் சிறந்த வருமானத்தையும் ஈட்டமுடியும்.

படுவான்கரைப் பிரதேசத்தில் காணப்படுகின்ற இயற்கை வனப்புக்களை மையமாக வைத்து (உதாரணம் மலைகள், காடுகள், வயல்நிலங்கள், ஆறுகள்) இங்கு உல்லாசத்துறையை விருத்தியுறச் செய்யமுடியும். இதனால் இங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பும் அதிக வருமானமும் கிடைக்கக்கூடியதாக விருக்கும்.

இங்கு வாழ்கின்ற அதிகளவான இளைஞர், யுவதிகள் படித்து விட்டு தொழில் அற்றவர்களாக இருக்கின்றனர். இவர்கள் நீண்டகாலமாக பெற்றோர், உறவினர் மற்றும் ஏனையோர்களில் தங்கி வாழ்பவர்களாக அல்லது கீழுழைப்பில் ஈடுபடுபவர்களாக வேயுள்ளனர். சிலர் அதிகளவான பணத்தை இடைத்தரகர்களுக்கு கொடுத்துவிட்டு வெளிநாட்டுக்குச் சென்று குறைந்த சம்பளத்தில் வேலை செய்து வருகின்றனர்.இவர்கள் நீண்ட காலமாக வெளிநாடுகளில் வேலை செய்துவரினும் அவர்களிடம் போதிய சேமிப்பு இல்லாமல் இருப்பதனால் தொடர்ந்தும் வறிய மக்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

இங்குள்ள மாணவர்கள், இளைஞர், யுவதிகள் போன்றோருக்கு தொழில்கல்வி புகட்டப்படுதல் மிகவும் அவசியமானதாகும். குறிப்பாக ஆங்கிலக்கல்வி, கணனிக்கல்வி, தொழிநுட்ப மற்றும், தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் விவசாய, வியாபார மற்றும் மருத்துவக்கல்வி என்பன புகட்டப்படுதல் வேண்டும்.

இளைஞர், யுவதிகள் சுயதொழில்களில் ஈடுபடக்கூடிய பயிற்சிநெறிகள் போன்றவற்றை அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், சமூக அமைப்புக்கள் போன்றன முன்னின்று பல்கலைக்கழகம் தொழிற்பயிற்சி அதிகார சபை தொழில்நுட்பக் கல்லூரி போன்றவற்றுடன் இணைந்து இதை நடைமுறைப்படுத்தலாம்.

படுவான்கரைப் பிரதேசத்தில் மீன்பிடித்தொழிலும் முக்கிய இடம் வகிக்கின்றது இங்குள்ள மக்கள் ஆறுகள், குளங்கள் போன்றவற்றில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுகின்றனர். இத்துறை இன்னும் விருத்தியடையச் செய்யப்படல் வேண்டும். நன்நீர் மீன்வளர்ப்பு இறால் வளர்ப்பு நண்டு வளர்ப்பு போன்றனவும் விருத்தியுறச் செய்யப்படல் வேண்டும். உள்ளூர் வெளியிடங்களிலுள்ள முதலீட்டாளர்கள் இதற்கு உதவலாம். பதனிடப்பட்ட மீன், இறால் நண்டு போன்றவை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படலாம். இதன்மூலமாக வேலையற்றோருக்கு சிறந்த வேலைவாய்ப்பு கிடைப்பதுடன் நல்ல வருமானமும் பெறக் கூடியதாகவிருக்கும்.

இங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்புக்கள் இங்கேயே கிடைக்கக்கூடிய வகையில் பல்வேறு வகையான தொழிற்சாலைகள் படுவான்கரைப் பிரதேசத்தில் நிறுவப்படுதல் மிகவும் அவசியமானதாகும். அரிசி ஆலைகள், ஆடைத்தொழிற்சாலை, பால்பதனிடும் ஆலை, மீன் உணவு பதனிடும் ஆலை, விவசாயப் பொருட்கள் மற்றும் பழங்கள் என்பவற்றை பதனிடும் நிலையங்கள் போன்றன இப்பிரதேசத்தில் அமைக்கப்படுவதன் மூலமாக இங்குள்ள மக்களது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும். இதற்கு இங்குள்ள அரசியல்வாதிகள், கல்விமான்கள், பெரியோர்கள் மற்றும் சமூக நலன்விரும்பிகள் போன்றோர் தொடர்ந்து முயற்சித்தல் வேண்டும்.

படுவான்கரை பிரதேசமக்களது பொருளாதார நிலைமை விருத்தியடைவதற்கு இங்குள்ள ஒவ்வொரு குடும்பமும் தத்தமக்குப் பொருத்தமான சுயதொழில்களில் ஈடுபட்டு சேமிப்பைக் கட்டியெழுப்புவது மிகவும் அவசியமானதாகும். இங்குள்ள சமூக அமைப்புக்கள் மக்கள் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதனைத் தூண்டும் வகையில் அவர்களுக்கு வேண்டிய தொழிற் பயிற்சிகள், தொழிநுட்ப அறிவு வங்கிகடன் போன்றவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஆவணை செய்யவேண்டும்.

எனவே மேற்கூறப்பட்ட உபாயங்களை கைக்கொள்வதன் மூலமாக படுவான்கரை பிரதேசமக்களது பொருளாதார நிலைமையை படிப்படியாக உயர்த்த முடியும் என்பது திண்ணமாகும்.

**பொ.நகுலேஸ்வரன்**
பணிப்பாளர் - முதலீட்டுச்சபை

# மட்டக்களப்பு தமிழியலாய்வு வளர்ச்சியும் மகேஸ்வரலிங்கமும்

**பேராசிரியர் செ.யோகராசா**

**ஆ**ய்வு ஆராய்ச்சி என்பதும் தமிழிற்குப் புதியதொரு முயற்சியாகவே கருதப்படுகின்றது. இவ்விதத்தில் தமிழின் முதல் ஆய்வாளராக கோல்ட்வெல் ஐயர் (1856) கருதப்படுகின்றார். ஆரம்பத்தில் தமிழ் இலக்கியம், இலக்கணம் என்பன சார்ந்திருந்த தமிழ் ஆய்வு காலப்போக்கில் மானிடவியல், வரலாறு சமூகவியல் முதலியனவற்றுடன் தொடர்புபட்டு தமிழியலாய்வு ஆகப் பரிணமித்தது. தமிழியலாய்வாளர் என்ற விதத்தில் ஈழத்தவரான மல்லாகம் வி.கனகசபைப் பிள்ளை முன்னோடி என்று கூறத்தக்கவர். "1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்" என்பது அவரது ஆய்வு நூலாகும். இத்தகைய சூழலில் ஈழத்தில் மட்டக்களப்பு பிரதேச தமிழ்ஃதமிழியலாய்வின் வளர்ச்சி பற்றியும் அவ்வழி மகேஸ்வரலிங்கம் என்பாரது தமிழியலாய்வுப் பங்களிப்பு பற்றியும் கவனிப்பது பயனுடையது.

இவ்விடத்தில் இன்னொரு முக்கிய விடயத்தையும் நினைவுகூர்வதவ சியம். ஆய்வு வளர்ச்சிக்கும் நவீன கல்வி முறையின் தோற்றத்திற்கும் நெருங்கிய தொடர்புள்ளது. ஈழத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து நவீன கல்வி இரு விதங்களில் காலூன்றியது. மரபு வழி சார்ந்த தமிழ்க்கல்வி நவீன கல்வி முறைமைக்குட்பட்டது மட்டுமன்றி ஆங்கிலம், விஞ்ஞானம் முதலிய புதிய கற்கை நெறிகள் சார்ந்த நவீன கல்வியும் ஆக அது இருகிளைப்பட்டு வளரத் தொடங்கியது. இத்தகைய ஆய்வுச் சூழல் மட்டக்களப்பிலே இருபதாம் நூற்றாண் டின் ஆரம்பத்திலேயே முகிழ்ப்புற்றது எனலாம்.

மேற்கூறிய பின்புலத்தில் மட்டக்களப்பின் நவீன தமிழியலாய்வு முன்னோ டியாக சுவாமி விபுலானந்தர் அமைகின்றார் விஞ்ஞானப் பட்டதாரியும் தமிழ்ப் பண்டிதருமான விபுலானந்தர் அவ்வாறு வெளிப்பட்டமை வியப்பிற்குரியதன்று. ஆயினும் தமிழ், இலக்கியம், மொழியியல், சமயம், தத்துவம், கலை, நாட்டாரியல், வரலாறு முதலான பல துறைகளிலும் ஈடுபட்டு அவர் தமது ஆளுமையை முழுமையாக வெளிப்படுத்துவதற்கு முன்னரே வித்துவான் பூபாலப்பிள்ளை எழுதி 'தமிழ் வரலாறு'(1920) என்றொரு ஆய்வு நூலை வெளியிட்டிருப்பது குறிப் பிடற்பாலது.

அதுமட்டுமன்றி, மட்டக்களப்பில்,தமிழ் ஆய்வு தமிழியலாய்வாக பரிணமிப் பதற்கு அடித்தளமான முன்னோடி முயற்சி என்ற விதத்திலே எஸ்.ஓ.கனகரத்தினம் என்பவர் வெளியிட்ட Monograph of Batticaloa District of the Eastern Province of Ceylon (1921) என்ற நூலின் முக்கியத்துவம் பற்றியும் மறப்பதற்கில்லை.

ஆயினும், சுவாமி விபுலானந்தரை தொடர்ந்து அவ்வப்போது பண்டிதர் பூபாலப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை முதலானோர் தமிழ் ஆய்வு முயற்சிகளில் அவ்வப்போது ஈடுபட்டு வந்திருப்பினும் ஐம்பதுகளின் பின்னரே அது உத்வேகம் பெறத் தொடங்கியது. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளின் செயற்பாடுகளோடு அவற்றைவிட முக்கியமாக பல்கலைக்கழகக் கல்வி அறுபது களளவில் தாய்மொழிக் கல்வியூடாக பயில்கின்ற வாய்ப்புக் கிடைத்தமையே அதற்கான முக்கிய காரணமாகிறது. இவ்விதத்தில் பல்கலைக்கழகக் கல்வி முறைமையுடன் தொடர்புபடாத வித்துவான் F.X.C.நடராசாவின் முயற்சிகளும் பண்டிதர் வீ.சி.கந்தையாவின் முயற்சிகளும் முக்கியமானவை. F.X.C.நடராசாவின் சுயமான கட்டுரைகள் மட்டுமன்றி அவர் தொகுத்த மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும் (1960) என்பதும் முக்கியமானதொரு நூலாகின்றது. மட்டக்களப்பு தமிழியலாய்வு என்ற விதத்தில் அது கவனத்திற்குரிய முன்னோடி முயற்சியா கின்றது. வீ.சி.கந்தையாவின் 'மட்டக்களப்பு தமிழகம் (1964) அவ்விதத்தில் மற்றொரு மைல்கல்லாகின்றது'.

பல்கலைக்கழக கல்வி முறைமையுடன் நேரடியாகத் தொடர்புபட்டவர்க ளென்ற விதத்தில் (தொழில் ரீதியிலே) பல்கலைக்கழகம் சார்ந்த சி.மௌனகுரு, இ.பாலசுந்தரம், சித்திரலேகா (உதயதேவி), நு.்.மான் எனப் பலரும் இத்துறையில் பிரவேசித்து தமிழாய்வுத் துறையை அகலப்படுத்தியும் ஆழப்படுத்தியும் வந்த சூழலிலேயே (தொழில் ரீதியில் பல்கலைக்கழகம் சாராத) டி.சிவராம், வ.சிவசுப்பிர மணியம், வித்துவான் கமலநாதன், மகேஸ்வரலிங்கம் ஆகியோர் தமிழாய்விற்குள் பிரவேசிக்கின்றனர்.

மகேஸ்வரலிங்கம் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளுள் கணிசமானவை இரு நூல்களாக வெளிவந்துள்ளன. இவற்றுளொன்று. 'மட்டக்களப்பு சிறு தெய்வ வழி பாடு - ஓர் அறிமுகம்' (1996). மற்றொன்று அவ்வப்போது எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாகிய 'மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும்' (2008).

இவ்விரு நூல்களும் மட்டக்களப்பு தமிழியலாய்வு வளர்ச்சியில் பெறுகின்ற முக்கியத்துவம் எத்தகையது என்பதே இவ்வேளை எமக்குள் எழுகின்ற வினா வாகின்றது.

மகேஸ்வரலிங்கத்தின் ஆய்வு முயற்சிகளுள் 'மட்டக்களப்பு சிறு தெய்வ வழிபாடு ஓர் அறிமுகம் என்ற நூல்' ஓர் அறிமுகம் என்ற நூல் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றென்பதனை வலியுறுத்த வேண்டியது அவசியமன்று. ஏனெனில் இதற்கு முன்னர் மட்டக்களப்பு பிரதேச சிறு தெய்வ வழிபாடு பற்றி உதிரியான கட்டுரைகள் தவிர ஆழமான ஆய்வுகளெதுவும் நடைபெற்றிருக்கவில்லை. இவ்வி தத்தில் இதுவே முதல் முயற்சியாகின்றது எனலாம். அதுமட்டுமன்றி (1) தெய்வ பாகுபாடும் சிறு தெய்வ வழிபாடும் (2) மட்டக்களப்பும் சிறு தெய்வ வழிபாடும் (3) பெண் தெய்வங்கள் (4) ஆண் தெய்வங்கள் (5) சிறு தெய்வங்களுள் சிறு

தெய்வங்கள் (6) பிதிர் வழிபாடு (7) பிற சமயத்தவரும் சிறு தெய்வ வழிபாடும் (8) வழிபாட்டு முறைகள் என்ற விதங்களில் பரந்த அடிப்படையிலும் ஆழமாகவும் நுணுக்கமாகவும் மட்டக்களப்பு பிரதேச வழிபாடு பற்றி அணுக முற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு பிரதேசத்தில் இத்தகைய கோயில்கள் அமைந் துள்ள ஊர்கள் பற்றிய அட்டவணையும் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஆய்வு நூல் தொடர்பாக, ஆய்வாளரொருவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை கவனத்திற்குரியது.

'மட்டக்களப்பின் வரலாறு இன்னும் சரியானபடி இனங்காணப்படவில்லை. மட்டக்ளப்பின் வரலாற்றை உருவாக்க வாய்மொழி, கலை இலக்கியப் பாரம் பரியமும் இன்று நின்று நிலவும் மத நடைமுறைகள், கரணங்கள் என்பனவும் கர்ண பரம்பரைக் கதைகளும் மிகுந்த உதவி புரியக்கூடும். இந்த வகையில் திரு.மகேஸ்வரலிங்கம் இந்நூலிற் தரும் தகவல்கள் மிகுந்த பயனுடையவை'

'மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும்' நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் பலவும் மட்டக்களப்பு பண்பாடு, சமயம், கலைகள் சடங்குகள், பிரதேச வரலாறுகள், ஆளுமைகள் முதலான பல்துறைகளும் சார்ந்தவை.

மேற்கூறியவற்றுள் சில, முதன் முயற்சிகளாம். மட்டக்களப்பு பண்பாட்டில் வீடும் வாழ்வும் என்பது இவற்றுள் முதன்மையானது. தலைப்பிற்கேற்ப ஊரும் வளவும், வீடு அமைப்பு, வீட்டமைப்பில் முக்கிய நிகழ்வுகள், குடும்பத் தலைமை, (வீட்டில்) சமய ஆசாரங்களைப் பேணல், (வீட்டில் நிகழ்கின்ற) சடங்குகள், (உ-ம் :திருமணம், மரணச் சடங்குகள்) என அகலமும் ஆழமும் பெற்று இக்கட்டுரை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இவ்வாறெல்லாம் நோக்கும் போது இக் கட்டுரையில் வீடு என்பது மட்டக்களப்புச் சமூக நிலையை வெளிப்படுத்தும் குறியீடு ஆகியிருப்பது கண்கூடு).

தவிர மட்டக்களப்பு பிரதேசச் சமயமும் சமயத்துடன் தொடர்புபட்ட வழி பாட்டு முறைகளும் சடங்குகளும் சார்ந்த கட்டுரைகளே இந்நூலில் அதிகளவு இடம்பெற்றுள்ளன. இவற்றுள், மட்டக்களப்பின் பண்டைய சமயநிலை பற்றிய கட்டுரை பண்டைய கால பல்வேறு சமயங்கள் பற்றியும் சுருக்கமாக ஆராய் கின்றமை குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரையில் சுருக்கமாக இடம்பெற்றவற்றுள் ஒன் றாகிய வழிபாட்டு முறைகள், பிறிதொரு கட்டுரையில் விரிவான ஆய்விற்குட் படுகின்றது.

மேற்கூறிய வகையான கட்டுரைகளுள் மட்டக்களப்பின் வீர சைவம் பற்றிய கட்டுரையும் முக்கியமானது. மட்டக்களப்பில் இச்சமயத்தின் தோற்றம், பரம்பல் பற்றி விரிவாக ஆராய்கின்ற ஆசிரியர் இலங்கையின் வீர சமய வர லாற்றுப்பின்னணியில் அவை பற்றி விளக்கிச் செல்வது பொருத்தமானது.

தொடர்ந்து, மட்டக்களப்பு தான்தோன்றீஸ்வரர் கோயில் பற்றிய (கோயில் அமைப்பு, வரலாறு, பூசைகள், விழாக்கள், முதலான விடயங்கள் சார்ந்த) விரிவான கட்டுரை இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

பிரதேச வரலாறு சார்ந்த கட்டுரைகளாக மூன்று உள்ளன. தாந்தாமலை, மண்முனை தென்மேற்குப் பிரதேசம், அம்பிளாந்துரைப் பிரதேசம் ஆகியன இவ் விதத்தில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு பிரதேச விளையாட்டுக்கள் தொடர்பானவையாக இரு கட்டுரைகள் காணப்படுகின்றன. இவற்றுள் ஒன்றான 'மட்டக்களப்பின் பாரம்பரிய விளையாட்டுக்கள்' பற்றிய கட்டுரை அப்பாரம்பரிய விளையாட்டுக்களை புதிய முறைகளில் வகைப்படுத்தி ஆராய்கின்ற புதிய முயற்சியாகின்றது. மற்றொன்றான கொம்பு விளையாட்டு, தெய்வ வழிபாட்டு என்ற விதத்தில் அணுகப்படுகின்றது. இதுபற்றி ஏலவே எழுதப்பட்டுள்ள வி.சீ.கந்தையா முதலானோரின் கட்டுரைகளை விட, புதிய சில தகவல்களைக் கொண்டதாகவும், படங்கள் பலவற்றைக் கொண் டதாகவும் இக்கட்டுரை அமைந்திருப்பது. பாராட்டப்பட வேண்டியதொன்றாகிறது.

மட்டக்களப்பின் ஆளுமைகள் சார்ந்ததாக அமைகின்ற இரு கட்டுரைகள் கூட மட்டக்களப்பு சமயப்பெரியார்கள் பற்றியனவே. இவ்விதத்தில், அருணாசல தேசிகர், வித்துவான் சரவண முத்தன் ஆகியோர் பணிகள் மட்டக்களப்பின் சுதேச இயக்கப்பின்புலத்தில் கவனத்திற்குட்படுத்தப்படுகின்றன. இவர்களுள் ஒருவரான அருணாசல தேசிகர் பற்றிய கட்டுரை விரிவான முதன் முயற்சி என்பதில் தவ றில்லை.

தவிர, இந்நூலில் இடம்பெற்றுள் இரு கட்டுரைகள் - நுண்கலைகள், நாட்டுக் கூத்துக்கள் தொடர்பானவை - அறிமுக நிலைப்பட்டன. ஆயினும், நூலிற்கு முழுமை சேர்ப்பன என்ற விதத்தில் முக்கியமானவையே.

சுருங்கக் கூறின், மட்டக்களப்பு பிரதேச பண்பாடு, சமயம், வரலாறு, சமூ கம், மானிடவியல் முதலான சார்ந்த முக்கிய கூறுகள் சிலவற்றை தமிழில் முதன் முதலாக ஆய்வுக்குட்படுத்தியவனவாகவும் சிலவற்றை முதன் முதலாக விரிவாக நோக்குவனவாகவும் மகேஸ்வரலிங்கத்தின் ஆய்வு முயற்சிகளுள்ளமை விதந்துரைக்கப்பட வேண்டியதொன்றென்பதில் ஐயமில்லை.

இந்நூற் தொகுப்பில் இடம்பெறத் தவறிய வேறு சில கட்டுரைகளோடு மட்டக்களப்பு வீர சைவம் பற்றிய விரிவான ஆய்வொன்றிற்கான முயற்சிகளிலும் மகேஸ்வர லிங்கம் நீண்டகாலமாக ஈடுபட்டு வந்துள்ளார். அவையாவும் நூலுருப் பெறுகின்ற போதுதான் அன்னாரின் ஆய்வு சார் ஆளுமை மென்மேலும் துலக்க முறும் என்பதையும் இவ்வேளை வற்புறுத்துவது அவசியமாகிறது.

இறுதியாக, பொருத்தம் கருதி மகேஸ்வர லிங்கம் பற்றிய பிறிதொரு

ஆய்வாளரின் குறிப்புடன் இவ்வறிமுகக் கட்டுரையை முழுமை செய்வது பொருத்த மென்று கருதுகின்றேன். அது பின்வருமாறு:

"மகேஸ்வரலிங்கம் அவர்கள் தொழில் முறை ஆய்வாளர் அல்ல. ஆயினும், அவரது ஆய்வுகள் பெரும்பாலும் ஆய்வு நெறிமுறைகளுக்கு அப்பால் விலகிச் செல்லவில்லை. நெறிமுறை சார்ந்த மானிடவியல் ஆய்வாளராகவே அவரைத் துக்கம் செய்கின்றன. தற்போது கொலறாடோ பல்கலைக்கழகத்தின் (University of Colorado at Boulder) மானிடவியல் துறையின் தலைவராக விளங்கும் பேராசிரியர் டெனிஸ் (Dennis) அவர்கள் கேம்பிறிஜ் (Cambridge) பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக விளங்கிய காலத்தில் (1970 களில்) மட்டக்களப்பைக் களமாகக் கொண்டு ஆய்வு மேற்கொண்ட வேளை அவருக்கு ஆய்வுத் துணைவராக விளங்கிய அமரர் மகேஸ்வரலிங்கம் அவர்கள் தொடர்ந்தும் அவரோடு புலமைத் தொடர்புகள் வைத்துக் கொண்டவர். அத்தொடர்பும் மகேஸ்வரலிங் கத்துக்கே இயல்பான ஆற்றலும் அவரை ஒரு சிறந்த மானிடவியலாய்வாளராகத் துலங்கச் செய்தன எனலாம்."



# மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் பரிகாரியார்கள் ஒரு தேடல்

**முருகு தயாநிதி (அதிபர்)**
M.A, M.Ed, M.Phil.

மட்டக்களப்பு வரலாறானது பெரும் பாலும் கலிங்கத்தையே பின்னிக் கிடக்கின் றது. குணசிங்கன் ஆட்சிக் காலத்தில் கலிங் கத்திலிருந்து வந்த குகசேனனின் புதல்வியாகிய உலகநாச்சி தனியான சிற்றரசு ஒன்றினை மண்முனை என்ற பெயரில் குணசிங்கனின் அனுசரணையுடன் உரு வாக்கி ஆட்சி செய்தாள். அதனைத் தொடர்ந்து கலிங்கத்தில் இருந்து அவளால் அழைக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட குகக் குடிகளும், சிறைக் குடிகளும் மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்டனர். மட்டக்களப்பை குணசிங்கன் ஆட்சி புரிந்த காலம் கி.பி 398 ஆகின்றது. மேகவண்ணன் காலம் கி.பி. 301 தொடக்கம் 382 என மகா வம்சம் குறிப்பிடுகின்றது.

இன்று மண்முனை தென்மேற்குப் பிரதேசம் 24 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கும் ஒரு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ளது. அம்பிளாந்துறை, கடுக்கா முனை, அரசடித்தீவு, பட்டிப்பளை, கொக்கட்டிச்சோலை, முனைக்காடு, முதலைக் குடா, மகிழடித்தீவு, படையாண்டவெளி, பாண்டாரியவெளி, மாவடிமுன்மாரி, தாந்தா மலை, கொல்லனுலை, குளுவினமடு ஆகிய கிராமங்களை உள்ளடக்குகின்றது.

இந்தக் கிராமங்களில் இருந்துதான் பரிகாரிகள் நாட்டு வைத்தியம் செய்து மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தனர். பரிகாரி என்றால் நாவிதன், வைத்தியன் என்றும், பரிகாரம் என்றால் இடைக்கட்டு, தீர்ப்பு, படுக்கை மற்றும் உபாயம் பொருள்கள் பரிகரித்தல் வைத்தியம், பராமரிப்பு, கேடு நீக்கம் கூறும் வாழ்த்து விலக்கு, பெண்மயிர் என்று கழகத் தமிழ் அகராதி குறிப்பிடும். பொதுவாகவே பரிகாரியார் என்போர் பரிசாரியார் என்ற கிராமிய வழக்குச் சொற் களிலேயே இன்று வரையும் பேசப்பட்டு வருகின்றனர். இவர்களை பரிகாரியார்கள் என்றே அழைப்பார்கள். இவர்கள் கூப்பிட்ட இடத்திற்கு வந்து பரிகாரம் செய்யும் தாராள மனம் படைத்தவர்கள். இத் தொழிலை தர்மமாகவே கொள்வார்கள்.

**பரிகார வைத்திய முறைகளாவன**

1. கை நாடி பார்த்து பரிகாரம் செய்யும் பல வைத்தியங்கள்.
2. விஷக்கடி வைத்தியம்
3. கட்டு வைத்தியம்.
4. உள் நாக்கு வைத்தியம்.
5. முறிவு வைத்தியம்

6. பயித்தியத்திற்கு வைத்தியம்
7. மிருக வைத்தியம்

போன்றவற்றைக் கொள்ள முடியும்.

**கைநாடி பார்த்தல்**

பிரசவம்
நொந்திப்பு
கண்ணோய்
மந்தம்
வாதம்
பித்த நோய்கள்
கற்பம்
வயிற்றுவலி
வாயு
சுரம்
சன்னி போன்ற நோய்களை கண்டுபிடிப்பதற்கு கைநாடி பிரதான இடத்தினை வகிக்கின்றது. கைநாடியில் என்ன வருத்தத்திற்கு குறிப்பிட்டவர் ஆளாகியுள்ளார் என்பதனை கண்டுபிடித்து விடுவார்கள்.

கைநாடியில் காலன் பிடிக்கும் நாடியைக் குறிப்பிட முடியும்

'அறவின்றன் நாலைப் போல அடிக்கடி
உதறி வாதம் உரம்பெற நின்று
பித்தம் ஓடியே ஒளிக்குமாகில்
திரும்பிடாக் காலந்தானே
தீங்குடன் பிடித்தானென்று'

இப்பாடல் கைநாடி மூலம் மருத்துவம் பார்க்கும் முறையினைக் குறிப்பிடுகின்றது. தற்பொழுது ஆங்கில வைத்திய முறையில் வைத்தியர்கள் கழுத்துக் குழல், கதிர் வீச்சுக் கருவி, கணினி மூலம் கண்டு கொள்ளும் நோய்க்கான அறிகுறிகளை அன்று ஏன் இன்றும் கைநாடி பிடித்தலால் கண்டு கொள்கின்றார்கள்.

**மூகிலிகைகள் சில**

பரிகாரியார்களின் கைமருத்துவம் அவர்களைப் பொறுத்து அது பிரபல்யமாக இருந்துவந்துள்ள சொத்தாகும். மூகிலிகைகளைக் கொண்டு மருந்துச் சேர்வை செய்திருக்கின்றார்கள். வேப்பிலை, கற்பூரவல்லி, மாந்துளிர், மாதுளந்து

ளிர், முடிதும்பை, பூவரச வேர், குப்பைமேனி, வேர்கொம்பு, புண்ணை வேர், சித்தமட்டி, வேலிப்பருந்தா தாம்பிராந்தி, நாயுருவி, எருக்கு மற்றும் முசுத்து முட்டை, நிலவேர் என்று அழைக்கப்படும் மண்புழு, கடைச்சரக்கு போன்றவைகளை மருந்துச் சேர்க்கைக்காகப் பயன்படுத்துகின்றனர்.

கண்ணோய்க்கு வெங்கல அம்மியில் வெங்கலக் குளவி கொண்டு மருந்து அரைத்துக் கொள்வார்கள். தொந்திப்பு எனும் நோய்க்கு வேப்பிலை, கற்பூரவல்லி, மாந்துளிர், மாதுளந்துளிர், முடிதும்பை, பூவரசம் வேர் கொண்டு கசாயம் காய்ச்சிக் கொடுப்பார்கள். அத்தோடு வேர்க்கொம்புச்சாறு, புண்ணை வேர்ச் சாறு, மிளகுச் சாறு, இளநீர், முடிதும்பை, மாதுளஞ்சாறு சுடுதண்ணீர் சேர்த்து அரைத்து குளிசையாக்கி கொடுப்பார்கள்.

**காலக் கணிப்பு**

பரிகாரியார்கள் பற்றிய தேடலில் ஈடுபட்டபோது, பரம்பரையாக வைத்தியம் செய்தவர்களுடைய தகவல் கிடைத்துள்ளது. பண்டாரியாகவெளியைச் சேர்ந்த கதிர்காமப் போடி அவர் மகன் பெத்திப்போடி இவர் மகன் சின்னத்தம்பி எனும் முறைமையில் இன்று சின்னத்தம்பி அனுமதிப் பத்திரத்துடன் வைத்தியம் செய் கின்றார். இவர் பிறந்தது 1937ம் ஆண்டு பெத்திப்போடி வைத்தியர் பிறந்தது 1898ம் ஆண்டாகும். கதிர்காமப்போடி வைத்தியர் பிறந்தது 1832 என்று கதிர்காமப் போடி வைத்தியர் பிறந்ததை ஊகமாகக் கொண்டு பின்னோக்கிச் சென்றால் அப்பரம்பரை யாழ்ப்பாண இராச்சிய காலம் வரை நகர்த்திச் செல்ல முடியும். இக்காலத்தில்தான் வைத்திய நூலான செகராச சேகரம் எழுந்தது. அதனைத் தழுவி பரராச சேகரம் அமைந்தது. அத்தோடு சோதிட நூலான செகராச சேகர மாலையும் எழுந்துள்ளது. எனவே ஒரு வகையில் 14 நூற்றாண்டு கால முற் பகுதியில் இருந்து வைத்திய சோதிட முறை மட்டக்களப்பு பிரதேசத்திலும் பரி காரிகளிடையே ஊடுருவப்பட்டிருக்கலாம் எனும் முடிவுக்கு வரச் செய்கின்றது.

மற்றுமொரு வகையில் கூறுவதாக இருந்தால் உலக நாச்சி மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் குகக் குடிகள் (106) சிறைக் குடிகள் (பணியாட்கள்) வரவழைத்து இப்பிரதேசத்தை உருவாக்கினாள் எனும் மட்டக்களப்பு பூர்வ சரித் திர மூலத்தைக் கொண்டு கணிக்கும் பொழுது அரசாட்சியில் மக்கள் குடியமர்த் தப்படும் பொழுது மேற்கூறிய குடிகளுடனும், பணியாட்களுடனும் இத்தகைய பரி காரிகளும் வந்திருக்க முடியும். அவர்களே இப்பிரதேசத்தில் வைத்திய முறைக ளைச் செய்து இருக்கின்றார்கள். அதன் தொடர்ச்சி இன்று வரையும் இப்பிர தேசத்தில் வேரூன்றியுள்ளது என்ற முடிவுக்கு வரச் செய்கின்றது.

கி.பி 1017ல் இராசேந்திர சோழன் இலங்கையை நோக்கிப் படையெடுத்து

வந்தபோதும் 6000 பேரை இங்கு அழைத்து வந்து குடியேற்றியிருக்கின்றான். அவர்களில் போர் வீரர்கள், வைத்தியர்கள், சதுர்வேதி மங்கலங்கள், பிரமதே யங்கள், நடன மாதர்கள், பல்வேறு பணியாளர்கள் போன்றோர் அடங்குகின்றனர்.

பரிகாரியார்கள் பயன்படுத்தும் வைத்திய நூல்கள் இந்தியாவில் அச்சி டப்பட்டவையே. அத்தோடு பரராச சேகர வைத்திய நூலும் ஒரு சிலரால் பயன் படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த நூல்களில் இடம்பெறாத மருத்துவ முறைகளும் காணப்படவே செய்கின்றது. அத்தகைய வைத்திய முறைகளை ஏடுகளில் இருந்தே கொப்பிகளில் எழுதியுள்ளனர். இதற்கு அப்பால் கைமருந்து முறைகளும் உண்டு.

## பரிகாரியார்கள் :

### பரிகாரியார்களுக்குரிய இலக்கணம்

சித்த மருத்துவ முறையில் பரிகாரியார்களுக்குரிய இலக்கணம் 240 பாடல்களில் கூறப்பட்டுள்ளது. அவற்றில் ஒரு பாடல் இவ்வாறு கூறுகின்றது.

'வாது குறி வைத்தியரே சொல்லக் கேளீர்
வாகாக கண் மூன்று தலைகள் நான்கு
நீதமுடன் முகங்களைந்து கைகளாறு
நிலை சரீரங்கள் எட்டு கால்கள் பத்து
வீதம் இதன் பயனறிந்தார் வியாதி தீர்ப்பார்
விதமாறியா மானிடரைப் பழியே சொல்வார்
சேதமாஞ்செய் மருந்து பலித்திடாது
செத்த பின்பு நீ நரகிற் சேருவாரே '

### பரிகாரியார்கள் கற்றுக் கொண்ட வைத்திய சோதிட நூல்கள்

பரிகாரியார்கள் பரிகார முறையினை மேற்கொள்வதற்காக

1. பதினென் சித்தர்கள் நாடி சாஸ்திரம்
2. பரராச சேகரம்
3. மந்திர ஆசான்
4. சுதேச வைத்திய ஔடதத் திரட்டு
5. பாக்கெட் வைத்தியம்
6. கண்ணுசாமி முதலியார் வைத்தியம்
7. ஆயுள் வேதமாகிய சிசிசாசர சாங்கிரகம்
8. வைத்திய சாங்கிரதம்
9. அகத்தியர் பரிபூரண நாடி

போன்ற வைத்திய நூல்களையும்.

1. விஷ வைத்தியம் ஒன்பது ஆருடம்
2. சித்த ஆருடம்
3. விஷ வைத்திய சிந்தாமணி

போன்ற விஷக்கடி வைத்திய நூல்களையும்

1. உள்ளமுடையான்
2. சரசோதிமாலை
3. சோதிட அரிச்சுவடி
4. சாகத சிந்தாமணி

போன்ற சோதிட நூல்களையும் வாகடம் எனும் மாடு, யானை, குதிரை எனும் மிருகங்களுக்கு ஏடுகளையும் கற்றிருக்கின்றனர்.

சித்த வைத்திய முறையினை மேற்கொள்ளுகின்ற பரிகாரியார்கள் வைத்திய மூலத்தை ஏடுகளில் இருந்து படித்ததாகக் கூறுகின்றார்கள். மரபு வழியாக வரும் சித்த வைத்திய முறைகளின் மூலம் ஏடுகளிலிருந்து பெறப்பட்டாலும், மூலம் பதினென் சித்தர் மரபில் இருந்தும் பெறப்பட்டிருக்கின்றது. சிலர் முறையாகக் கற்றிருக்கின்றனர். அவர்களுக்கு அனுமதிப்பத்திரமும் கிடைத்திருக்கின்றது. சிலர் இடையில் கற்றலை நிறுத்தியமையினால் அவர்களுக்கு அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லை. எனினும் அவர்களும் சிறந்த பரிகாரியார்களாக இருந்து இருக்கின்றனர்.

பரம்பரையில் வரும் பரிகாரியார்களே சிறப்பாக வைத்தியம் செய்துள்ளனர். இவர்களுக்கு குரு சீட உறவு உண்டு. இன்றுள்ள பண்டாரியாவெளி சின்னத்தம்பிப் பரிகாரியார், அம்பிளாந்துறை கோவிந்தராசா பூசாரியார் வல்லிபுரம் சவுக்கடி வைத்தியர் மற்றும் செல்லத்தம்பி ஆகியோர் பரம்பரையாகவே வைத்தியம் செய்து வருகின்றனர். மற்றும் முறையாகக் கற்றவர்களும் சிறந்த பரிகாரியார்கள் சிலர் கொப்பியைப் பார்த்து கற்றும், கேள்விப்பட்டவைகளைக் கொண்டும் மருத்துவம் செய்கின்றனர். இம்முறையில் மருத்துவத் தெளிவு வெளிப்படாதுள்ளமையும் கண்டு கொள்ளத்தக்கது.

## தேடலில் கிடைக்கப்பெற்ற பரிகாரியார்களின் பெயர்கள்

**அம்பிளாந்துறை**

01. மயில்வாகனச் சமியார் - (இறந்துள்ளார்)
02. வீமாப்போடி - (இறந்துள்ளார்)
03. இளையதம்பிக் குருக்கள் - (இறந்துள்ளார்)
04. மண்முனைப்போடி - (இறந்துள்ளார்)
05. விசுவநாதர் - (இறந்துள்ளார்)
06. மாணிக்கப்போடி வாத்தியார் - (இறந்துள்ளார்)

07. ஆலம்பிள்ளை - (இறந்துள்ளார்)
08. அருளம்பலம் - (இறந்துள்ளார்)
09. செல்லையா (பரிகாரி செல்லையா) - (இறந்துள்ளார்)
10. தம்பிமுத்து (கொட்டான் தம்பிமுத்து) - (இறந்துள்ளார்)
11. சின்னத்தம்பி (வட்டான சின்னத்தம்பி) - (இறந்துள்ளார்)
12. தம்பிமுத்து (தம்மூத்தர்) - (இறந்துள்ளார்)
13. வேலாப்போடி - (இறந்துள்ளார்)
14. பாக்கியசெல்வம் (பாக்கியம் விதானையார்) - (இறந்துள்ளார்)
15. கந்தசாமி - (இறந்துள்ளார்)
16. பேரானந்தம் - (இறந்துள்ளார்)
17. பொன்னம்மா - (இறந்துள்ளார்)
18. மாமாங்கம் - (இறந்துள்ளார்)
19. செல்லத்தம்பி - (இறந்துள்ளார்)
20. சின்னத்தம்பி (பூசாரியார்) - ([illegible])
21. கோவிந்தன்
22. வல்லிபுரம்
23. தவலிங்கம்
24. செல்லத்தம்பி
25. செல்வராசா
26. சற்குணராசா

**கடுக்கா முனை**

01. சின்னத்தம்பி - (சாத்திரியார் சின்னத்தம்பி)
02. சாமித்தம்பி - (இறந்துள்ளார்.)

**அரசடித்தீவு**

01. கற்பூரப்போடியார் - (இறந்துள்ளார்)
02. புள்ளயாங்குட்டி - (இறந்துள்ளார்)
03. வேலாப்போடி - (இறந்துள்ளார்)
04. வே.மாணிக்கப்போடி - (இறந்துள்ளார்)

**பட்டிப்பளை**

01. கந்தப்போடி - (இறந்துள்ளார்)
02. அலையப்போடி - (இறந்துள்ளார்)
03. கதிர்காமப்போடி - (இறந்துள்ளார்)
04. இரத்தினசிங்கம்

**கொக்கட்டிச்சோலை**

01. குமரகுரு - (இறந்துள்ளார்)
02. திருமேனி (வட்டான) - (இறந்துள்ளார்)
03. ஏகாம்பரம் - (இறந்துள்ளார்)
04. புவனசிங்கம் - (இறந்துள்ளார்)
05. இளையதம்பி - (இறந்துள்ளார்)
06. கணபதிப்பிள்ளை - (இறந்துள்ளார்)
07. கோபாலபிள்ளை - (இறந்துள்ளார்)
08. சின்னமுத்து

**முனைக்காடு**

01. குமாரசாமி - (இறந்துள்ளார்)
02. சின்னத்தம்பி (பூசாரியார்) - (இறந்துள்ளார்)
03. பொன்னம்பலம் - (இறந்துள்ளார்)
04. வேலிப்பிள்ளை (மறையத்தார்) - (இறந்துள்ளார்)
05. சின்னத்தம்பிப்போடி - (இறந்துள்ளார்)
06. வைரமுத்து - (இறந்துள்ளார்)
07. கதிர்காமப்போடி - (இறந்துள்ளார்)
08. கணபதிப்பிள்ளை - (இறந்துள்ளார்)
09. பாலிப்போடி - (இறந்துள்ளார்)
10. வெள்ளத்தம்பி
11. கேதாரப் பிள்ளை
12. அமராபதி

**முதலைக்குடா**

01. கோபாலப்பிள்ளை (வாத்தியார்) - (இறந்துள்ளார்)
02. சிவலிங்கம்

**மகிழடித்தீவு**

01. காத்தாப்போடி - (இறந்துள்ளார்)
02. இளையதம்பி - (இறந்துள்ளார்)
03. தம்பிப்போடி (வாத்தியார்) - (இறந்துள்ளார்)
04. பொன்னம்பலம் வாத்தியார் - (இறந்துள்ளார்)

**பண்டாரியாவெளி**

01. கதிர்காமப்போடி - (இறந்துள்ளார்)
02. பெத்திப்போடி - (இறந்துள்ளார்)

03. சின்னத்தம்பி
04. சடாசிவக் குருக்கள் - (இறந்துள்ளார்)
05. தம்பியார் (தம்பியக் கிழவர்) - (இறந்துள்ளார்)
06. சின்னத்தம்பி (அல்லி சின்னத்தம்பி) - (இறந்துள்ளார்)
07. புவனேஸ்வரி

**நாற்பதுவட்டை**

01. க.வசந்தா

**மாவடிமும்மாரி**

01. க.கதிர்காமப்போடி

**நீறுபோட்ட சேனை**

01. தங்கராசா

## மந்திரமும் பரிகாரியார்களும்

வாழ்வும் சாவும் செய்யக்கூடிய மந்திரங்கள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் குரு - சீட பரம்பரையில் நாட்டார் கலையாக அறியப்பட்டு வந்துள்ளன. கண்ணூறு கழித்தல், பேயோட்டல், சுழுக்குப் பார்த்தல், சுகமான பிரசவத்தை ஏற்படுத்தல், விஷமிறக்கல், தண்ணீர் ஓதிக் கொடுத்தல், வயிறு தடவுதல், போன்ற நோய்களுக்கு மந்திரத்தைப் பயன்படுத்தி வைத்தியம் செய்கின்றனர். பாம்புக்கடி வைத்தியம் செய்யும் போது 'அமுத பார்வை', 'கருடபார்வை' மூலம் மந்திரத்தினால் தியானித்து விஷமிறக்குவார்கள். தன்னை 'கருடனாகவோ, கீரிப்பிள்ளையாகவோ தியானித்து விஷத்தை இறக்குவார்கள். 'கரடிப்பார்வை', 'சக்தியப்பார்வை' ஆகிய தியான முறைகளும் உண்டு.

இலகுவாக குழந்தைப்பேறு கிடைப்பதற்கு வெற்றிலையை மந்திரத்தால் ஓதிக் கொடுப்பார்கள். மாக்கொடி விழாமல் இருந்தால் அது விழுவதற்கும் இத்தகைய செயற்பாடு மேற்கொள்ளப்படும். மேலும் பெண்களுக்கு துவாலை போகும் போது அதனைத் தடுப்பதற்கும் மந்திரம் உதவுகின்றது.

ஒருவருக்கு மோகினிப் பயித்தியம் இருக்குமானால் அவருக்கு நசியம் மடித்து, மந்திரத்தால் மடை வைத்து மோகினி உருவம் மாவினால் செய்து அந்த நோய் தீர்க்கப்படும்.

பேய், பிசாசு பார்வையாகியிருந்தால் மந்திரத்தால் குழையடித்து பேயோட்டி, கழித்து, உடலுக்குள் மருந்து கொடுப்பார். அத்தோடு யாந்திரத் தகடும் மந்திரத்தால் ஆவகாணம் செய்து கூடு போடப்படும். இது இடுப்பிலோ, கழுத்திலோ கட்டப்படும்.

நோயாளிக்கு திருநீறு சாத்தும் போது மந்திர உச்சாடனம் செய்யப்படும். இதுவே முதலானதும் பிரதானமானதும். இவ்வாறாக மந்திரம் பரிசாரியார்களுடைய பரிகார முறைகளில் பல்வேறு நோய்களைத் தீர்ப்பதற்கு மருந்துடன் பிரதான மானதாக அமைகின்றது.

**வைத்திய முறைகள் சில**

**மரித்த பிள்ளை விழுவதற்கு :-** 'நிலவேரை அரைத்து இரண்டு உள்ளங் காலிலும் பூச உடனே பிள்ளை பிறக்கும் உடனே காலைக் கழுவிப் போடவும் அல்லது குடல் வரும்' எனும் வைத்தியமுறை வருகின்றது.

**பிரசவிப்பதற்கு :-** 'ஒரு கிண்ணத்தில் எண்ணெய் அல்லது வெண்ணெய்யை விட்டு டங்டம் என 108 உரு செபித்து அம்மாது வயிற்றின் மேல் இறங்க தடவிப் பூசவும் அரை நாளிகைக்குள் சிசுவானது விரைவில் விந்து விழுந்து விடும்' எனும் வைத்திய முறையும்.

**முறைக்காய்ச்சலுக்கான குளிசையாக :-** 'வெள்ளைப் பாசாணம் கற் சுண்ணாம்பு இரண்டு கூட்டி கஞ்சாச்சாறு விட்டரைத்து பயறு உருண்டை பண்ணி முலைப் பாலில் ஒரு உருண்டையளவும் பயறும் அரிசியும் கஞ்சி காய்ச்சி கொடுக்கவும்.

**துவாலை மறிபடுவதற்கும் :-** 'மாவிலங்கை தயிர்வேளை, நொச்சி, வேம்பு இலைகள், வேர் சமன் கொண்டு நல்ல அரக்கு வாத்தரைத்து அரக்கு விட்டுக் குளப்பிக் காய்ச்சி காயமாத்தின்று அதன் மேல் கொஞ்சம் அரக்காகுதல் வெண்ணீராகுதல் குடிக்கவும் வயிற்று வியாதிக்கு கையாக்கிப் பிள்ளை இல்லாதவர்களுக்கு பிள்ளை உண்டாகும்.

**எலிகடிக்கு :-** காஞ்சோன்றி புன்னை வேர்களும் அரைத்து மோர் சேர்த்து குடிக்க பதினெட்டு எலிக் காய்ச்சலும் தீரும்.

**மந்தம் எனும் நோய்க்கு :-** சித்த மட்டிச் சாறு, உள்ளிக் குளிசை, மாதுளஞ்சாறு கொண்டு குளிசை தயாரித்து பெரிய பிள்ளைக்கு, சிறிய பிள்ளைக்கு என்ற வேறு வேறாக குளிசை கொடுக்கப்படும்.

**வாதத்துக்கு :-** பூச்சி மருந்து வேலிப்பருத்திச் சாறு, தூள், ஒத்து, எண்ணெய், லேகியம் கொண்டு நோய் சுகப்படுத்த முடியும்.

**பிரசவத்திற்கு :-** 64 வாயுக் குளிசை, ஈஸ்வரக் குளிசை கொடுத்தும்.

**வயிற்று வலிக்கு :-** 64 வாயுக்குளிசை, தம்பிராந்தி குளிசை, வாயுக்கு ஈஸ்வரக் குளிசை, ஊறல் கொடுத்தும்.

**சுரத்துக்கு :-** சுரப்பூவலிக் குளிசை, சித்தமட்டி ஊறல், (மூச்சுரத்தூறல்) கொடுத்தும்.

**சன்னிக்கு :-** குளிசை, முக்கூட்டு எண்ணெய்,அஞ்சலச் சாதகத்து எண்ணெய் குழையடித்தல், நசியம் அடித்தல் ஆகிய வழிமுறைகளின் ஊடாக சுகப்படுத்த முடியும் என்பார்கள்.

இந்த மருந்து ஒவ்வொன்றும் ஒன்றுக்கு மேற்பட்ட முகிலிகைகளின் கலப்பால் ஆனது. முகிலிகைக்கான சில பெயர்கள் மாற்றுப் பெயர்களில் இருக் கின்றது அல்லது குழுக்குறியிலுள்ளது. மாற்றுப் பெயர்களையும், குழுக் குறிகளை யும் அறிந்தவர்களால் மாத்திரமே மருந்து செய்ய முடியும். இதற்கு நிகண்டு, முகிலிகை அகராதி படிப்பது அவசியம். அத்தோடு மரபு அடிப்படையில் மருத்துவம் செய்பவர்களுக்கு அது கைவந்த கலை. இங்கு ஒரு குழுக்குறி பாடலைக் குறிப்பிட முடியும்.

தலையிடி காய்ச்சல் வந்தால் தயவுடன்
மருந்தைக் கேளும்
மலையடிவாரத்தில் கிடக்கும் கல்லை
வண்டில் விட்டு ஏற்றி வந்து
தலையை கீழே வைத்து கல்லை மேலே வைத்தால்
தலையிடி தானாகவே தீர்ந்துவிடும்.

இந்தப்பாடலில் வரும் மலையடிவாரத்தில் கிடப்பதும் கல் அல்ல அது ஒரு மூலிகையாகும். மாற்றுப் பெயர்களையும் குழுக் குறிகளையும் பயன்படுத்தி யதற்கும் காரணம் மற்றவர்கள் அதனை அறிந்து கொள்ளக்கூடாது என்பதற்காகும். உதாரணம் ஒரு பாடலில் நிலவேரை அரைத்துக் கொடுக்க வேண்டும் என்று வருகின்றது. இந்த நிலவேர் மண்புழுவையே சுட்டிநிற்கின்றது.

## முறையாகக் கற்றல்

பரிகாரியார்கள் பலர் முறையாகக் கற்று வைத்தியம் செய்திருக்கின்றனர். காலஞ் சென்றவர்களான அம்பிளாந்துறையைச் சேர்ந்த பாக்கியசெல்வம் அவர்கள் 1940ம் ஆண்டு காலப்பகுதியிலும், கடுக்காமுனையைச் சேர்ந்த சாமித்தம்பி அவர்கள் 1942ம் ஆண்டு காலப்பகுதியிலும் கற்றிருக்கின்றனர். மட்டக்களப்பு மாவட்ட ஆயுர் வேத சங்கத் தலைவராக இருந்த பொன்னுத்துரை அவர்களிடமும் சந்தியாப்பிள்ளை - தோமஸ் என்பவரிடமும் கற்றுள்ளனர். சின்ன உப்போடையைச் சேர்ந்த செல்லையா பரிகாரியாரிடம் பாக்கிய செல்வம் அவர்கள் கற்பம், கிராந் திக்கு முறையாகவே பரிகாரம் கற்றுக்கொண்டார். ஒரு தலைக்குத்துக்கு சிறப்பாக வைத்தியம் செய்வார். சாமித்தம்பி அவர்களும் இறக்கும் வரை பல்வேறு

வைத்தியங்களை சிறப்பாக மேற்கொண்டவர். ஆயுர் வேதம், விஷக்கடி, கைநாடி என்று பல்துறை வைத்தியம் செய்தவர். இவருடன் அமிர்தகழி சோமசுந்தரம் கொம்மாதுறையைச் சேர்ந்த டோவி ஒருவரும் படித்ததாக எனக்குத் தகவல் தந்தார். தோமாஸ் வைத்தியருக்கு இரண்டு கால்களும் முடம் என்று கூறினார். சாமித்தம்பி அவர்கள் ஒரு நடமாடும் வைத்தியராக செயற்பட்டவர். அவரை நான் பலமுறை சந்திக்க சென்ற போதும் அவர் வீட்டில் நிற்பது அரிது. அவர் எங்கேயோ வைத்தியம் பார்க்கவே சென்றிருப்பார். அத்தகைய வைத்தியம் செய்யும் தேக ஆரோக்கியம் உடையவராக இருந்தவர் அவர்.

### பாக்கெட் வைத்திய நூல்

பாக்கெட் வைத்திய நூலில் எழுபத்து ஈராயிரம் நரம்புகள் மனிதர்களுக்கு உண்டு என்றும், 4448 வியாதிகளுக்கு மருந்துண்டு என்றும் வருகின்றது. இந்நூல்

01. மாத்திரை
02. பூரண முறைகள்
03. லேகிய முறைகள்
04. செந்தூர முறைகள்
05. கிருத முறைகள்
06. கட்டு முறைகள்
07. மெழுகு முறைகள்
08. வடக முறைகள்
09. ரசாயன முறைகள்
10. திராவத முறைகள்
11. ஷர்பத முறைகள்
12. பலபோத முறைகள்

எனப் பன்னிரெண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 4448 வியாதிகளுக்குரிய வைத்திய முறைகளையும் உள்ளடக்குகின்றது. பாக்கெட் வைத்திய முறைகளை பரிகாரி யார்கள் பெரும்பாலும் பயன்படுத்துகின்றனர். இந்த நூலில் ஒவ்வொரு வியாதிக்கு மான முகிலிகை வகைகளை சேர்த்து மருந்தாக்கும் முறைகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

### விஷக்கடி வைத்தியம்

விஷக்கடி வைத்தியம் இன்றும் இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படு கின்றது. விஷக்கடியில் பாம்புக்கடி வைத்தியத்துக்கு பரிகாரம் முழுமையாகவே காணப்படுகின்றதெனலாம். அருக்கன் நிற்கும் நிலையை வலக்கப்பக்கமாக எண்ணி கணக்கிட வேண்டும் என்பார்கள். இது ஒவ்வொரு நாளும் வெவ்வேறு திசைகளில் நிற்கும் என்பார்கள் விஷக்கடி வைத்தியர்கள் அருக்கன் நிற்கும் நிலையை,

காரி சனி பகல் அருக்கன் கிழக்காகும்
கங்குலுக்குக் கதிரோன் தெற்கு
சீறிய அருக்கன் நீரே தென்மேற்கு
செவ்வாய்க்கு மேற்கே நிற்கும்
பூரியதோர் புந்தி புதன் வடமேற்கே
புகழ்ந்து வரும் பொன்னவர்க்கு வடக்கே நிற்கும்
நாரிகேள் பொன் கடிகை எட்டுங் காட்டி
நயந்த வெள்ளி ஏக்கே வடகிழக்கு

எனும் பாடலின் மூலம் சனி, ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களின் அருக்கனாதிய நாடகம் நிற்கும் நிலையை காண முடியும்.

திசைக் குறிப்புடன் சாதிகளைக் கண்டுபிடித்தலை.

'அருக்கன் நாகம் தேள் வழலை
அலை நீர் பாம்பு மாநாகம்
எரிக்கும் எலியாம் மண்டெலியாம்
எழில்கொள் சாரை ஆடரவம்
புரிக்கும் எறும்பு புடையன் என்னும்
புள்ளியெனும் பூரமொடு பொருந்த விரியன்
சிலந்தி பேணி அறிவீர்
பெரியாரே'

என்னும் பாடல் மூலம் அறிந்துகொள்ளலாம்.

பாம்புக் கடிக்கு தூதன் குறி சொல்லுதல், தவணை போடுதல் (ஆணை போடல்) விஷக்கல் கொடுத்தல், குழையடித்தல் எனும் முறைகள் பிரதானமானது. இதற்கு மந்திரம் பிரதான இடத்தினை வகிக்கும்.

விசக்கடி வைத்தியத்தை மேற்கொள்ளும் விசக்கடி வைத்தியர்கள் பணம் வாங்குவதில்லை. இதனை ஒரு சேவையாகவே கொண்டு செய்கின்றனர்.

விசக்கடி வைத்தியத்தில் வைத்தியர்களிடையே போட்டியும் இருந்துள்ளது. இதன் காரணமாக விசம் இறக்க மேற்கொள்ளும் செயற்பாடுகளின்போது அதனை முறியடிக்க விசம் ஏற்றும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. இதனால் இறப்பு வரையும் அவர்களை இட்டுச் சென்றிருக்கின்றது.

**கட்டு வைத்தியம்**

வைத்திய முறைகளில் கட்டு வைத்தியமும் ஒன்றாகும். எமது உடலில் எங்காவது ஒரு பாகத்தில் கட்டுத்திரட்டுமானால் அதனை அமர்த்துவதற்கும்

மருந்து பூசுவார்கள். அக்கட்டு வெடிக்கும் நிலையில் இருக்குமானால் அதனை கீறி மருந்து கட்டுவார்கள். இத்தகைய வைத்தியர்கள் சிலரே இருந்திருக்கின்றனர். அம்பிளாந்துறையைச் சேர்ந்த மண்முனைப்போடி கட்டுப்பரிசாரியார் என்று அழைக் கப்பட்டார். மேலும். பண்டாரியாவெளி சின்னப்பிள்ளை, முனைக்காடு நல்லம்மா, மற்றும் செலிந்தரம்மா, கொக்கட்டிச்சோலை சின்னமுத்து ஆகியோர்களும் கட்டுக் குப் பரிகாரம் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கட்டு வைத்தியர்களாக நாசிவ தொழில் செய்பவர்கள் தொழிற்பட்டுள்ளனர். அதனால் அவர்களுக்கு பரிகாரியார்கள் என்ற பெயரும் உண்டும். இத்தகையவர்கள் முழுமையாகவே கட்டு வைத்தியவர்களாக செயற்பட் டனர். கட்டு வெடிக்க வைப்பதற்கு முகிலிகைகளைச் சேர்த்து அரைத்துப் பூசுவார்கள்.

## முறிவு வைத்தியம்

முறிவு வைத்தியத்தினை மேற்கொண்டு வரும் அம்பிளாந்துறையினைச் சேர்ந்த சற்குணராசா அவர்கள் இப்பிரதேசத்திலே பிரபல்யமானவர். இவரும் பரம்பரையான ஒரு முறிவு வைத்தியர் கைமருத்துவம், இவருக்குச் சிறந்த மருந்து முறித்த இடத்தினை, அல்லது சுழுக்கு ஏறிய இடத்தினை இலகுவாகக் கண்டு பிடித்து மருத்துவம் செய்வார். கோழிமுட்டையின் வெள்ளைக்கரு இந்த வைத்தி யத்தின் மருந்துக்களில் ஒன்று. பல்வேறு முகிலிகைகளில் எண்ணெய் காய்ச்சி நோவுகளுக்குப் பூசுவார்.

இப்பிரதேசத்தில் முறிவு வைத்திய முறை மிக மிகக் குறைவாகவே காணப்படுகிறது. முறிவு வைத்திய மரபு இப்பிரதேசத்தில் இருந்ததாகத் தெரிய வில்லை. எனினும் சுமுக்கு பார்ப்பதற்கு எண்ணெய் காய்ச்சி பூச்சி மருந்தாகப் பயன்படுத்தியுள்ளார்கள். சிறப்பாக காலால் பிறந்த ஆண்கள் சுழுக்கு பார்த்தால் அது தீரும் என்ற நம்பிக்கையும் உண்டு. அம்பிளாந்துறை கருணாநிதி இத்தகைய சேவையை செய்து வருகின்றார்.

## உள் நாக்கு வைத்தியம்

உள்நாக்கு வைத்தியம் செய்தவர்களும் இப்பிரதேசத்தில் இருந்துள்ளனர். அவர்கள் முறையாகப் படித்தவர்கள் அல்லர். சில முகிலிகைகளை எடுத்து அதனைப் பிளிந்து தலையின் நடுப்பகுதியில் தேய்த்து அந்த இடத்தில் உள்ள தலைமுடியை கையால் பிடித்து மூன்று தடவை வேகமாக இழுப்பார்கள். அப்போது 'டப்' என்ற சிறிய ஒலி கேட்கும். இதனை மூன்று நாட்கள் தொடர்ச்சியாக விடியற் காலையில் சூரிய உதயத்திற்கு முன்பாகச் செய்வார்கள். அந்த நோய் தானாகவே குறைந்து போய்விடும்.

அம்பிளாந்துறையில் எனது காலஞ்சென்ற தாயார் இந்த வைத்திய

முறையினைச் செய்து வந்தார். நான் அவரிடம் இந்த முகிலிகையினைச் செய்து வந்தார். நான் அவரிடம் இந்த முகிலிகை பற்றிக் கேட்ட போது அவர் கூறினார் 'இது எனக்கு கனவில் இறைவன் சொன்னது. இம்முகிலிகை பற்றி நான் சொல்ல முடியாது அப்படி சொன்னால் நான் செய்யும் வயித்தியம் பலிக்காது' என்றார். இத்தகைய கை மருத்துவம் செய்பவர்கள் குறைவாகவே உள்ளனர்.

பண்டாரியாவெளி புவனேஸ்வரி, முனைக்காடு அமராபதி ஆகியோரும் உள்நாக்குக்கு வைத்தியம் செய்து வருகின்றனர்.

உள்நாக்கு வைத்தியத்தியத்தினை செய்பவர்களில் அதிகமானவர்கள் பெண்களாவர். இதற்காக மூன்று முகிலிகளைக் பயன்படுத்தி பயன்படுத்துகின்றனர். அவற்றுள் ஒன்று முடிதும்பை மற்றைய இரண்டையும் கூறுகின்றார்கள் இல்லை. இதற்கு மற்றயவர்கள் தெரிந்து கொள்வார்கள் என்பதற்கு அப்பால் மேற்கூறிய காரணமும் ஒன்றாகும். அறிந்த வகையில் பெண்கள் செய்யும் இந்தக் கைம்மருந்து சிறப்பாக வெற்றியளித்துள்ளது.

## மிருக வைத்தியம்

மிருகங்களுக்கு வைத்தியம் செய்யப்பட்டது. இத்தகையவர்கள் மிருக வைத்திய பிரியர்கள் என்று அழைக்கப்பட்டனர். ஆடு, மாடுகளுக்கு நோய் தீர்க்கப்பட்டது. மாட்டு வைத்தியத்திற்கு வாகடம் உண்டு. இப்பிரதேசத்தில் அத்தகைய வாகட முறையிலே மாடுகளுக்கு பரிகாரம் இடம்பெறுகிறது. இரும்பை பழுக்க காய்ச்சி சூடு வைத்தல் பிரதான வைத்திய முறையாகும். மற்றயவை யெல்லாம் முகிலியையுடன் சேர்ந்த கை வத்திய முறையாகவே அமைகின்றது. அம்பிளாந்துறையில் செல்லத்தம்பிப் பரிகாரியார், கொக்கட்டிச்சோலையில் வெள் ளைத்தம்பி, மகிழடித்தீவில் தம்பிராசா, அரசடித்தீவில் கதிர்காமப்போடி, பண்டாரி யாவெளியில் சாமித்தம்பி, தாமோதிரம் முனைக்காடு சின்னத்தம்பிப்போடி, மாவடி முன்மாரி கதிர்காமப்போடி, நீறுபோட்ட சேனை தங்கராசா போன்றோர் இவ் வைத்திய முறைகளை மேற்கொள்கின்றனர்.

'மாட்டுக்கு சூட்டுக்கு மிஞ்சிய பரிகாரமில்லை' என்பர். மாட்டுக்கு வலி வந்தால் நெற்றியில் இருந்து வால் வரையும் பழுக்கக் காய்ச்சிய இரும்பால் இழுப்பார். சந்து ஏறியதற்கு, தந்தக் கட்டுக்கு, பதகளைக்கு என்றவாறு சூடு பிடிக்கப்படும். முன்னடைப்பு, பின்னடைப்பு, வெட்டுக்காயம் போன்றவற்றிற்குரிய மருத்துவ முறையும் கால் உடைந்தால் முறி மருந்தும் செய்யப்படும்.

## பயித்தியத்திற்கு வைத்தியம்

பயித்தியத்திற்கு வைத்தியம் செய்தவர்கள் இப்பிரதேசத்தில் அரிதாகவே உள்ளனர். 1997ம் ஆண்டு காலமணி அம்பிளந்துறை பேரானந்தம் அவர்களே

இந்த நோய்க்கு வைத்தியம் செய்து வந்தார். குற்றியில் கட்டுதல், நசியம் அடித்தல், மந்திர உச்சாடனம், கழிப்பு எனும் முறையில் பரிகாரம் இடம்பெறும்.

தற்பொழுது பூசாரியார் கோவிந்தராசா அத்தகைய முயற்சியினை மேற் கொண்டு வருகின்றார். மேற்கூறிய முறைகளுடன் சோதிடத்தினையும் சிறப்பாகப் பயன்படுத்துகின்றார். சோதிட உண்மை வழி மருந்து செய்வது இலகாகும் என் றார். முனைக்காட்டை சேர்ந்த வாலசிங்கம் அவர்களும் வயித்தியம் செய்திருக்கின்றார்.

## தற்பொழுது வைத்தியத்தில் ஈடுபட்டுள்ள பரிகாரியார்கள்

பண்டாரியாவெளியைச் சேர்ந்த சின்னத்தம்பி வைத்தியர் ஆயுர் வேதத் துடன் விஷக்கடி வைத்தியத்தையும் மேற்கொள்கின்றார். பெத்திப்போடி வைத்தி யரின் மகனான இவர் வைத்திய அத்தாட்சிப் பத்திரம் வைத்துள்ளார். இப்பிரதே சத்தில் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் இவருக்கு மட்டுமே உண்டு. இந்த வைத்தியம் அத்தாட்சிப்பத்திரம் அவருடைய அப்பா பெத்திப்போடி வைத்தியருக்கு கிடைத்ததாகும்.. இவருடைய அப்பா கதிர்காமப்போடியும் சிறந்த வைத்தியராவார். இவருடைய காலம் கி.பி. 1750 ஆண்டுகளாகும்.

ஆயுர்வேத மற்றும் விஷக்கடி மருத்துவ முறைகளை மேற்கொள்ளும் சின்னத்தம்பி வைத்தியருடைய பரம்பரை வைத்திய பரம்பரையாகும். பெத்திப்போடி யின் தம்பி அரசடித்தீவில் வாழ்ந்த வேலாப்போடியும் ஒரு வைத்தியராவார். சின்னத் தம்பி வைத்தியருடைய மகன் சிவலிங்கம் அவர்களும் இன்று முதலைக்குடாவில் இருந்து வைத்தியம் செய்கின்றார். இவரே அடுத்த தலைமுறைக்கு இந்த வைத்திய சேவையை எடுத்துச் செல்லும் ஆற்றலுடையவராக உள்ளார்.

ஆயுர்வேத சித்த வைத்தியச் சின்னத்தம்பி அவர்களுடைய வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தில் 'ஸ்ரீ நடேசானந்த ஆயுர்வேத வைத்தியசாலை' எனும் குறிப்பு உள்ளதோடு பத்திர இலக்கம் MC/C856/3986 என்றும் பதிவு இலக்கம் 46/8 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. முனைக்காடு கேதாரப்பிள்ளையும் அனுமதிப் பத்திரம் வைத்துள்ளார். மேலும் முனைக்காடு சின்னத்தம்பி, கதிர்காமத்தம்பி, வைரமுத்து ஆகியோரும் அனுமதிப்பத்திரம் வைத்துள்ளனர்.

அம்பிளாந்துறையில் இருக்கும் வல்லிபுரம் அவர்கள் விஷக்கடி வைத்தி யத்தை சிறப்பாகச் செய்து வருகின்றார். விஷக்கடிக்கு முழுமையாகவே வைத்தி யம் செய்யும் இவருக்கு அக்கலை கைவந்த கலையாகும் மிகவும் நுட்பமாகவே மேற்கொள்கின்றார். இக்கிராமத்தில் உள்ள செல்லத்தம்பி அவர்களும் விஷக்கடி வைத்தியத்தை மேற்கொள்கின்றார். இவர்கள் மாமன் மருமக்களாவர். பண்டாரியா வெளியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர்கள் அல்லி சின்னத்தம்பி அவர்களு டைய பரம்பரையாகும்.

அம்பிளாந்துறைக் கிராமத்தில் உள்ள மட்டக்களப்பு மாந்திரிகப்புகழ் பெற்ற கோவிந்தராசா அவர்கள் அம்மன் சடங்குதனை சிறப்பாகச் மேற்கொள்கின் றார். அம்பிளாந்துறையில் மரபு வழியாக மாரியம்மன் சடங்கினை மேற்கொள்ளும் இவர் நாற்பதாம் கிராமம், மகிழூர்முனை, இடும்பண்டகுளம் ஆகிய இடங்களில் மாரியம்மன் சடங்கினையும், மகிழடித்தீவில் காளியம்மன் சடங்கினையும் செய்து வருகின்றார். இவர் சடங்கு எனும் முறைக்கு அப்பால் சோதிடத்தையும் சித்த வைத்தியத்தையும் மேற்கொள்கின்றார். பயித்தியத்திற்கு நசியம் அடித்தல் முறையில் சிறப்பாக பரிகாரம் காண்கின்றார். பல வியாதிகளுக்கு மந்திரமும் மருந்தும் நோய் தீர்க்கும் இவர் பரிசாரி செல்லையா அவர்களுடைய புதல்வராவர். இவருடைய பரம்பரையும் மந்திரமும் வைத்தியமும் கைவரப் பெற்ற பரம்பரையாகும். இக்கிராமத்தில் வளர்ந்து வரும் பரிசாரியராக செல்வராசா அவர்களும் பரிகாரம் செய்து வருகின்றார்.

பட்டிப்பளைக் கிராமத்தில் இருக்கும் இரத்தின சிங்கக்குருக்கள் அவர்களும் பரிகாரம் செய்கின்றார். குளிசைகள், மருந்துகள் காய்ச்சி வைத்தியம் செய்கின்றார். அத்தோடு கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த வேதநாயகமும், முதலைக்குடாவைச் சேர்ந்த பொன்னம்பலமும் வைத்தியம் செய்து வருகின்றனர்.

பொதுவாக அவதானிக்கும் போது இப்பிரதேசத்தில் சித்த வைத்திய மரபு இருந்திருக்கின்றது. அந்த மரபின் வழிதான் இன்று வரையும் வைத்திய முறை நிலைத்திருக்கின்றது. சிலர் குருவிடம் நேரடியாகக் கற்று வைத்தியம் செய்து இருக்கின்றனர். பலர் மரபு வழியில் கற்று வைத்தியம் செய்கின்றனர். 1929ம் ஆண்டு சித்த மருத்துவத்துறை இலங்கையின் கொழும்பிலும் 1984ல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் ஆரம்பிக்கப்பட்டு சிறப்புப் பெற்றது. இன்று பல மாவட்டங்களிலும் ஆயுர் வேத வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டு, அதற்காக வைத்தியர்களும் பயிற்றுவிக்கப்பட்டு ஆங்கில வைத்தியத்திற்கு நிகராகவும் பக்கவிளைவு இல்லாத வைத்திய முறையாகவும் திகழ்கின்றது.

## தகவல் தந்தோர்

1. ஆ.கந்தப்போடி (1927) முனைக்காடு
2. வே.சின்னத்தம்பி பூசாரியார் (1925) ஆம்பிளாந்துறை.
3. சாமித்தம்பி பரிகாரியார் (1930 - 2010) கடுக்காமுனை
4. சின்னத்தம்பி வைத்தியர் (1937) பண்டரியாவெளி
5. செ.கோவிந்தராசா பூசாரியார் (1957) அம்பிளாந்துறை
6. வே.வல்லிபுரம் விஷக்கடி வைத்தியர் (1958) அம்பிளாந்துறை.

# மண்முனை தென்மேற்குப் பிரதேச கல்வியும் எதிர்நோக்கும் சவால்களும் - ஒரு மீள்நிலை நோக்கு

திரு.சி.குருபரன்

**கொ**க்கட்டிச்சோலை தபாலக விநியோகப் பிரிவுக்குள்ளும் மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலகப் பிரதேசத்துக்குள்ளும், உட்பட்ட 24 கிராம சேவைகள் பிரிவுக்குள் 20 பாடசாலைகள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இப்பிரதேசத்திற்குள் நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட குடும்பங்கள் 7331 ஆகும். இக் குடும்பங்களில் 80 வீதத்துக்கு மேற்பட்டோர். விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். இதில் 18 வீதத்தினர் அரச தொழிலும் ஈடுபட்டுக் கொண்டு விவசாயத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். 43 வீத மாணவர்கள் சமூர்த்தி உணவு முத்திரையைப் பெறுகின்றனர். இதில் தரம் 5 வரை கற்றவர்கள் ஏறக்குறைய 26.3 வீதத்தினர் உள்ளனர். 08 வீதமான பெற்றோர் இன்றும் கையடையாளத்தையே ஒப்பமாக இடுகின்றனர். இக்கட்டுரை பட்டிப்பளைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் வாழும் மக்களிடத்தில் கல்வி எந்தளவு செல்வாக்குச் செலுத்தி இருக்கிறது. அதற்குத் தடையாக அல்லது சவாலாக பலவீனமாக அமைந்த காரணிகள் தொடர்பாக ஆராய முற்படுகிறது.

இப்பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில்

| ஆண்டு | பாடசாலைகள் | வகை III | வகை II | வகை I C | மாணவர் | ஆசிரியர் |
|---|---|---|---|---|---|---|
| 2009 | 18 | 6 | 9 | 3 | | |
| 2010 | 20 | 8 | 9 | 3 | 6173 | 287 |
| 2011 | 20 | 8 | 9 | 3 | 6356 | 313 |

வகை II பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண வகுப்பு வரையுள்ள பாடசாலைகள் 07 உள்ளன. 1983ம் ஆண்டு முதல் 2009 வரை நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் இப்பிரதேசத்தின் கல்வியில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 1983ம் ஆண்டுக்கு முன்னர் க.பொ.த. சாதாரண தரம் வரையுள்ள பாடசாலைகள் மாத்திரமே இருந்தன. இங்கு பரீட்சைக்குத் தோற்றுவிப்பவர்கள் ஆற்றுக்கு அப்பாலுள்ள பாடசாலைகளுக்குச் சென்று கா.பொ.த. உயர்தரம் கற்று வந்தனர். 1989 இல் மட்/முதலைக்குடா மகா வித்தியாலயத்திலும், 1996 இல் அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும் அதன் பின் அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயத்திலும் உயர்தரம் கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர் 2001ம் ஆண்டு மட்/அரசடித் தீவு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் விஞ்ஞான பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 2003 இல் அப்பிரிவு நிறுத்தப்பட்டது. இதற்குப் பல சாவல்களும், பலவீனங்களும், அச்சுறுத்தல்களும் செல்வாக்கு செலுத்தின.

1985ம் ஆண்டுக்கு முன்னர் இப்பிரதேசத்தில் இருந்து மட்டக்களப்பிலுள்ள பிரபல்யமான பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானத் துறைகளில் அதிகமானோர் கற்றனர். அசாதாரண சூழல் காரணமாக வசதி படைத்தோர் பலர் குடும்பத்தோடு இடம்பெயர்ந்து நகர்புறங்களில் குடியேறினர். அதிலும் 2001ம் ஆண்டு இப்பிரதே சத்தில் கல்வியில் பாரிய வீழ்ச்சியினை ஏற்படுத்தியது. அத்தோடு இப்பிரதேசத்தில் இருந்து நிரந்தரமாகப் பலரை இடம்பெயரச் செய்தது. 2007 இடம்பெயர்விலும் இதே நிலை ஏற்பட்டது. மட்டக்களப்பு நகரிலும் அதனை அண்மித்த பிரதேசங்களி லும் குடியேறியவர்கள் தமது பிள்ளைகளைக் கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய துறைகளில் உயர்தரம் கற்கச் செய்துள்ளனர். அவர்கள் நகர வாழ்க் கைக்கும் பழகிவிட்டனர். அவர்களில் பலர் வைத்தியம், பொறியியல் தொழில்நுட் பம், தாதி வேறு பிரபல்யமான துறைகளில் இணைந்து கற்று முடித்தவர்கள் தொழிலிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

1977 முதல் 2007 வரையுள்ள காலப்பகுதியில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களை இப்பிரதேசத்தில் உள்ளவர்களில் பலர் கற்பித்தனர். இன்று பெரும்பாலும் அந்நிலை மாறிவிட்டது. ஓரிருவர் மாத்திரமே இப்பாடங்களைக் கற்பிக்கின்றனர். இங்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், நடனம், சங்கீதம், தொழினுட்பம் ஆகிய பாடங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவு கிறது. க.பொ.த. சாதாரண தரம் கற்கும் மாணவர்களில் 17.7 வீதத்தினர் எழுத்து, வாசிப்பு, கூட்டல் கழித்தல், பிரித்தல் பெருக்குதல் எண்ணக்கரு மிக மிகக் குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இக்குறைபாட்டுக்கு ஆரம்பப் பிரிவிலுள்ள பல வீனங்களையே சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

1988க்குப் பின்னர் இருந்து இப்பிரதேசத்தில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் போதுமானளவு நியமனம் செய்யப்பட்டிருந்தனர். 1990, 1991 காலப்பகுதியில் ஒரு பற்றாக்குறையும் காணப்பட்டது. இதற்குக் காரணம் 1988 இல் நியமனம் செய்யப் பட்ட ஆசிரியர்களில் 80 வீதத்தினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குச் சென்றனர். இது ஒரு பாதிப்பினை ஏற்படுத்தியது. எல்லைப்புறக் கிராமங்களில் உள்ள பாடசாலைகள் ஆசிரியர் சென்று வருவதில் ஓரளவு பிரச்சினை இருந்தாலும் அது பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை. இவ்வாறு இருக்கையில் எழுத்து, வாசிப்பு, கணித எண்ணக்கரு என்பவற்றில் பின்னிற்கின்ற மாணவர்கள் எவ்வாறு உருவாகி னார்கள். இதற்கு அதிபர், ஆசிரியர்கள் முன் கற்பித்த ஆசிரியரையும், பெற்றோரையும், கல்வி அதிகாரிகளையும் காரணம் காட்டி தப்பித்துக் கொள்கின்றனர்.

இடைநிலைக் கல்விக்கு அத்திவாரமாக அமைகின்ற ஆரம்பக் கல்வியினைத் தோல்வி நிலைக்கு இட்டுச் சென்று தமது பக்கத் தவறுகளை மூடி மறைத்து பிறர் மீது குற்றம் கூறும் அதிபர் ஆசிரியர்களை மன்னிக்கவே முடியாது என்ற உண்மையை சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு மாணவனுக்கு எழுத வாசிக்கப் பழக்குவதற்கு கூடியது ஆறுமாதம் போதும், முதல்நிலை ஒன்றில் தரம் 1, 2 வரையுள்ள ஏறக்குறைய வருடத்துக்கு 195-202 நாள் வரை பாடசாலை நடக்கின்றன. 38 தொடக்கம் 42 வாரங்கள் கற்பித்தலுக்கென ஒதுக்கப்படுகின்றன. முதல் நிலை ஒன்றில் ஒரு ஆசிரியரே கற்பித்தல் பணியில் ஈடுபடுகின்றார். முதல்நிலை ஒன்றில் ஏறக்குறைய 80 வாரங்கள் கற்பித்தல் பணியில் ஈடுபட்டு எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்கள் இருக்கின்றார்கள் என்றால் இதற்கு யார் மீது குற்றம் கூறுவது.

மாணவன் பாடசாலைக்கு இடைவிட்டுவரும் மாணவர்கள் இடைவிலகிய மாணவர் தொடர்பாக பாடசாலையில் இருக்கும் பாடசாலை வரவுக் குழு கட்டாயக் கல்விக்குழு ஆகியன மாதமொரு முறை கூடி ஆராய்ந்து அந்த மாணவர்களைப் பாடசாலைக்குள் கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்நடைமுறை பாடசாலைகளில் பின்பற்றப்படுவதில்லை. அத்தோடு பாடசாலைக்குச் சமூகளிக்காதிருக்கும் மாணவர்களுக்கு 'வரவின்மை' தொடர்பான அடையாளமும் தண்டனையும் வழங்கப்படுகின்றனவே தவிர, இது தொடர்பாக பெற்றார் சந்திப்புக்கள், மாணவருடனான கலந்துரையாடல்கள் பெரும்பாலும் நிகழ்த்தப்படுவதில்லை. பெரும்பாலான பாடசாலைகளில் ஆரம்பப்பிரிவு தொடர்பான உள்ளக மதிப்பீட்டுத் திட்டம், கண்காணிப்புத் திட்டம் ஆகியன இருந்ததற்கான சான்றுகள் எதுவுமில்லை. இன்று உயிரோட்டமான கற்றல், மகிழ்ச்சிகரமான கற்றல், விளையாட்டு மூலம் கற்றல், குழுமுறைக் கற்றல் எனப் பயிற்சிகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்தப் பயிற்சிகள் நடைமுறைப்படுத்தப்படுவதனைக் கண்காணிப்பதற்கான விசேட திட்டம் எதுவும் யாரிடமும் இருந்ததற்கான சான்றுகளும் இல்லை.

இப்பிரதேசத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளை மதிப்பீடு செய்வதற்கான ஒழுங்கான திட்டம் இருந்தமைக்கான சான்றுகளும் இல்லை. Ever green அச்சகத்தினால் அச்சிட்டு வழங்கப்பட்ட அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிக் கணிப்பீட்டுப் புத்தகங்களை பயன்படுத்திக் கணிப்பீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்களே தவிர தேசிய கல்வி நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட திட்டத்துக்கு நிகரான திட்டமொன்றை எமது பிரதேசத்திற்கு ஏற்ற வகையில் நடைமுறைப்படுத்துவதற்கு முன்வருவதில்லை.

அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் தொடர்பாக மாணவர்கள், பெற்றோருக்கு விழிப்புணர்வு செய்யப்படவில்லை. அத்தோடு பெரும்பாலான அதிபர்களும் இதில்

தெளிவற்றவர்களாகவே காணப்படுகின்றனர். அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிக் கணிப்பீட்டுக்கு எந்தளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றனவோ அந்தளவு மாணவரின் அடைவு மட்டத்தையும் அதிகரிக்கலாம். இதில் காணப்படும் தோல்வி யும் பலவீனமுமே பெருமளவு மாணவர்கள் ஆரம்பப் பிரிவில் எழுத வாசிக்க முடியாத மற்றும் எண்ணக்கரு தொடர்பாக இடருறுகின்ற மாணவர்கள் உருவாவ தற்குக் காரணமாக அமைகின்றது. இது பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளில் பாரிய வீழ்ச்சியினை ஏற்படுத்தி நிற்கின்றது.

இடைநிலைக்கல்வி தொடர்பாக அவதானிக்கின்றபோது ஆரம்பக் கல்வி யில் எழுத்து வாசிப்பு, கணித எண்ணக்கரு ஆகியவற்றில் பின்னிற்கின்ற மாண வர்கள் எல்லோரும் மெல்லக் கற்கும் மாணவர்களாக தமது கற்றலை முன்னெ டுத்துச் செல்கின்றனர். இது தொடர்பான விசேட கவனமெடுப்புக்கள் எதுவும் குறித்த மாணவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுவதில்லை. மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக்கள், பரிகாரக் கற்பித்தல் முயற்சிகள் மாலை நேர வகுப்புக்கள் பெரும்பாலும் நடைபெறுவதில்லை. இவ்வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆரம்பப்பிரிவில் கற்பித்த ஆசிரியர்களையும், முன்னர் குறித்த பாடம் கற்பித்த ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் சளைக்காது குறை கூறிக் கொண்டே இருப்பர். இக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு விசேட திட்டம், ஏதாவது அம்மாணவர்களைப் பிரதான அருவி மயப்படுத்தபடுத்துவதற்குப் பெரும்பாலும் ஆசிரியர்கள் முன்வருவதில்லை. குறையும், குற்றமும் கூறுவதிலேயே காலம் கழிகிறது.

பாடசாலைகளில் பரீட்சைக்குத் தயார்படுத்தும் முயற்சி தரம் 5 சாதாரண தர, உயர் தரம் ஆகியவற்றுக்கே மும்முரமாக நடைபெறுகிறது. தரம் 09 இல் மாகாண மட்டப் பரீட்சைக்கும் மாணவர்களை தயார்படுத்தும் முயற்சியில் இறங் கினால் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றை அதிகரிக்கலாம். கல்வி என்பது ஒரு தொடர் செயற்பாடு அதனை விசேட கண்காணிப்புக்கு உட்படுத்திச் செயற்படுத்துவதன் மூலம் சகல பொதுப் பரீட்சைகளிலும் அடைவு மட்டத்தை அதிகரிக்கலாம்.

மேலும் கணிதம், விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களில் பலர் தமக்கு பரிச்சயமான பாடப்பரப்புக்களை நன்கு கற்பிக்கின்றனர். ஏனையவற்றைத் தொட்டுச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. புவியியல், வரலாறு, தமிழ் மொழியும் இலக்கியமும் ஆகிய பாடங்களுக்கும் இதே நிலையே தொடருகின்றன. மொழிப் பாடம் கற்பித்தல் சில ஆசிரியர்கள் இலக்கணத்தைத் தொட்டும், இலக்கியத்தை மேலோட்டமாகவும் ஒப்புவிப்பதையும் அவதானிக்க முடிகிறது. ஆசிரியர்கள் நவீன முறைகள், உத்திகள், நுட்பங்கள், பாணிகளை, கற்றல் பாங்குகள் தெரியா

மல் தமக்கு தெரிந்த பரீட்சயமான முறை ஒன்றில் விரிவுரை செய்வதையும் காண முடிகிறது. இதிலும் மிகப்பெரிய குறைபாடு மாணவர்களின் பயிற்சிப் புத்தகம் திருத்தப்படாமல் இருப்பது.

ஆரம்ப பிரிவு தொடர்பாக இன்னுமொன்றையும் கூறிக் கொள்ள வேண்டும். 2010 இல் 10 பாடசாலைகளில் தரம் 03 இல் கற்கும் 100 மாணவர்களை உள்ளடக் கிச் செய்யப்பட்ட ஆய்வொன்றில் 47 வீத மாணவர்கள் தங்கள் ஆசிரியர் தமிழ் மொழி, சுற்றாடல், சமயம் போன்ற பாடங்களை நன்கு கற்பிப்பதையும் கணிதம், ஆங்கிலம், போன்ற பாடங்களைத் தொட்டுச் செல்வதையும் அறிய முடிந்தது. இது ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களிடத்தில் கணித எண்ணக்கரு, ஆங்கிலம் ஆகியவற்றில் காணப்படும் விடயதானக் குறைவை எடுத்துக் காட்டுகின்றது. இதனைக் கொழும்பு பல்கலைக்கழகம் நெரெக் மூலமாகச் செய்த ஆய்விலும் சுட்டிக் காட்டி இருந்தனர்.

ஆரம்ப பிரிவு ஆசிரியர்களில் பலர் மாணவர்களிடம் உபகரணங்களை செய்து வருமாறு கூறுகின்றனர். மாணவர்கள் பெற்றோரிடம் கூறி அவர்களை அல்லது இன்னுமொருவர் செய்து கொடுக்கப் பாதுகாப்பாகக் கொண்டு செல்கின்ற னர். மாணவர்களை உரிய பொருட்களைக் கொண்டு வரச் செய்து வகுப்பறையில் செய்வதன் மூலமே மாணவர்களுக்குத் தேர்ச்சி கிடைக்கிறது பெற்றார் செய்து கொடுத்ததில் தேர்ச்சி எத்தனை மாணவர்களுக்கு கிடைக்கும் இந்த விடயம் ஆசிரியர் களுக்கு நன்றாக தெரிந்திருந்தும் சில ஆசிரியர்களிடம் காணப்படும் வக்கிர புத்தியினால் அதனைச் செய்ய மறுக்கின்றனர். செய்து கொண்டு வராதிருக்கம் மாணவர்களுக்கு தண்டனை வழங்குவது. தகாத வார்த்தைகளால் ஏசுவது ஆகியனவும் சில ஆசிரியர்களிடத்தில் இன்றும் காணப்படுகின்றன. இன்னுமொரு பாடசாலை வலய மட்ட உள்ளகக் கண்காணிப்புப் குழு வருகிறது எனக் கூறிக்கொண்டு சில ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் வகுப்பறையை அழகுபடுத்துவதற்காக தினமும் ஒவ்வொரு பொருளைக் கொண்டு வருமாறு அச்சுறுத்தியுள்ளனர். இது பெற்றோரிடத் தில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இவ்வாறான சம்பவங்கள் இப்பிரதேசப் பாடசாலைகள் சிலவற்றில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

கீழ்வரும் அட்டவணை கடந்த 03 வருடங்களில் மண்முனை தென்மேற்கு பாடசாலைகள் பெற்ற பொதுப்பரீட்சைப் பெறுபேறுகளாகும்.

| ஆண்டு | தரம் – 5 | | | க.பொ.த. சாதாரண தரம் | | | க.பொ.த. உயர்தரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றியோர் | சித்தி பெற்றோர் | வீதம் | தோற்றியோர் | சித்தி பெற்றோர் | வீதம் | தோற்றியோர் | சித்தி பெற்றோர் | வீதம் |
| 2008 | 322 | 7 | 2.2 | 317 | 127 | 40.0 | 64 | 54 | 73.7 |
| 2009 | 418 | 7 | 1.7 | 388 | 109 | 28.0 | 58 | 43 | 71.1 |
| 2010 | 366 | 11 | 3.0 | | | | 82 | 44 | 67.0 |

இதன்படி கடந்த 03 ஆண்டுகளிலும் பெறுபேற்று மட்டம் குறைந்திருப் பதை அவதானிக்க முடிகிறது. 2010 ஆம் ஆண்டில் புலமைப்பரீட்சை, சாதாரண தரம் என்பவற்றில் முன்னேற்றம் காணப்படுகிறது. இருந்தும் இந்நிலை போது மானதாக இல்லை. ஆளணி, பௌதீக வளம், சாதனங்கள் என 75 வீதத்துக்கு மேல் நிறைவு செய்யப்பட்டிருக்கின்ற வேளையில் இத்தகைய பெறுபேறு போது மானதாக இல்லை என்பதை அறிய முடிகிறது.

இன்று பெரும்பாலான பாடசாலைகளில் இளைஞர்களின் பங்களிப்பு அதிகரித்து வருகின்றது. இரவு நேர வகுப்புக்கள், பயிற்சி வகுப்புக்கள், எழுத்து வாசிப்பு பயிற்சிகள் என அவர்களின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இரவு நேர வகுப்புக்கள் மாணவர்கள் தொலைக்காட்சிக்கு முன்னால் இருப்பதைக் கட்டுப்படுத்துகிறது. அதனால் அவர்களின் கற்றல் முன்னேற்றம் ஏற்படுகின்றது. சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு பரிகாரக்கற் றல் வகுப்புக்களை வைப்பதை விடுத்து ஓய்வு நேரத்தையும் முறையாகப் பயன்படுத்தாமல் பாடசாலை விட்டதும் வெளியேறுகின்றனர். இவர் மத்தியில் பலவீனமான சிந்தனையும் எந்த விடயத்தையும் மறுத்துக் கூறும் (Negative) மனப்பாங்கும் அபரிமிதமாகக் காணப்படுகின்றன. அதிலும் பட்டிப்பளை பிரதே சத்தில் இருந்து படித்து ஆசிரியர் தொழிலில் இணைந்து கொண்ட ஆசிரியர் பலரிடத்தில் இந்த சிந்தனை அதிகம் காணப்படுகிறது.

க.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்து உயர்தரத்திற்கு செல்லும் மாணவர்களுக்கு பாடத் தெரிவுக்கான முறையான வழிகாட்டல்களும் செய்யப் படுவதில்லை. பல்கலைக்கழகத் தெரிவுக்கான வெட்டுப்புள்ளி கணித்தலில் சமூக விஞ்ஞான பாடங்களுக்கான z புள்ளி மாணவர்களுக்குச் சாதகமாக அமைகின்றன. இந்தவிடயம் முறையாக வலியுறுத்தப்படுவதில்லை. இந்து நாகரிகம், இந்து சமயம் கற்பிக்கும் ஆசிரியர்கள் தமது பாடத்தை எடுக்க மாணவர்களை வற்பு றுத்துகின்றனர். 21 ஆம் நூற்றாண்டின் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய மாணவர் சமுதாயத்தை உருவாக்க வேண்டுமெனில் தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம், தொழில்நுட்ப பாடங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண் டிய அவசியம் உணரப்படுகின்றது. பாடசாலைக்கல்வி பிள்ளையின் எதிர்கால வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாக அமையவேண்டும் .

ஒவ்வொரு தரம் 11 1 c பாடசாலைகளிலும் தொழிலுக்கு வழிகாட்டல். பாடத்தெரிவுக்கு வழிகாட்டல் சேவை முன்னெடுக்கப்படவேண்டும். பாடசாலைகளில் இருக்கும் கணினிகள் யாவும் மாணவரின் கற்றலுக்காக வழங்கப்படவேண்டும். கணினிக்கல்வியும் ஆங்கிலமும் இல்லாதவர்கள் எதிர்காலத்தில் தொழிலைப்

பெறமுடியாத நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. இன்றைய தொழிலுக்கு எது தேவையோ அதற்கு மாணவர்கள் வழிகாட்டப்பட வேண்டும்.

இப்பிரதேசத்தில் உள்ளவர்களில் பெரும்பாலான பெற்றார் பாடசாலைகளுடன் தொடர்பினை வைத்துக்கொள்வதில்லை. தமது பிள்ளைகள் தொடர்பாக அதிபர் ஆசிரியர்களுடன் சந்திப்புக்களை ஏற்படுத்திப் பிள்ளையின் கற்றல் தொடர்பாக கலந்துரையாடுவதில்லை. இப்பிரதேசத்தின் கல்வி தோல்வியடைந்தமைக்கு இதுவும் ஒரு காரணமாகச் சுட்டிக் காட்டலாம் எமது மக்களில் பெரும்பாலானோர் கூடிக் கதைப்பதையும், வீணாக நேரத்தைக் கழிப்பதையும் தவிர்த்துத் தமது பிள்ளையின் கல்வியில் சாதகமான (பாரிய) தாக்கத்தினை ஏற்படுத்தலாம்.

ஒரு கிராமத்தில் ஆலயங்களும் வளரவேண்டும் வித்தியாலயமும் வளர வேண்டும். ஆனால் பெற்றோர் வருடமொன்றுக்கு ஆயிரக்கணக்கான பணத்தினை ஆலயங்களின் நிர்மாணம், வருடாந்த உற்சவம், பூசைகள் என்று செலவிடுகின்றனர். இதில் ஒரு சொற்ப தொகையினையாவது பாடசாலைகளில் மாலை நேர வகுப்புக்களுக்கு ஒதுக்குவார்களேயானால் அது பெரும்பேராக அமையும் ஆலயங்களும் தமக்குக் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியினை ஏழை மாணவர்களின் கல்விக்காக மேலதிக வகுப்புக்களுக்காக செலவிடலாம். மக்கள் சேவையே மகேசன் சேவை. பாடசாலைகள் எதிர்வரும் காலங்களில் தனித்திருந்துசெயற்பட முடியாது. பாடசாலைகள் மெது மெதுவாக சமூகமயப்படுத்தப்பட்டுக்கொண்டு வருகின்றன. சமூகத்தின் பங்கு பற்றுதலுடன் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். பிள்ளை விரும்பும் சமூகம் விரும்பும் பாடசாலைகள் உருவாக்கப்பட வேண்டும். பிள்ளைகளின் கல்விக்காக அர்ப்பணிக்கின்ற சமூகம் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் நாம் எதிர்பார்த்த அடைவினை எதிர்காலத்தில் அடைய முடியும்.

குறைகளைக் கூறிக் கொண்டிருப்பதனாலும் வீதிக்கு வீதி நின்று பாடசாலையை விமர்சனம் செய்து கொண்டிருப்பதனாலும் ஆகப்போவது ஒன்றுமில்லை. இவர்கள் யாவரும் குறிப்பாக இளைஞர்கள் அபிவிருத்தி செய்யும் நோக்கோடு பாடசாலையோடு இணைய வேண்டும். எமது கிராமத்தின் முன்னேற்றம் எனும் மனப்பாங்கோடு மாணவர்களின் கல்வியை வளப்படுத்த உதவ முன்வரவேண்டும். செயறிட்டங்கள் உடாகப் பாடசாலை அபிவிருத்தி செய்யப்படவேண்டும். எம்மிடம் புரையோடிப்போய் இருக்கும் மறையான சிந்தனைகளைய்ப் பலவீனங்களையும் விலக்கித் தடைகள் சவால்களை எதிர்கொண்டு அபிவிருத்திப் பாதையில் வெற்றிநடை போட்டு மாணவர்களின் அடைவு மட்டத்தினை உயர்த்த முன்வர வேண்டும்.

தடைகள், சவால்கள், அச்சுறுத்தல்களைக் கண்டு நெகிழ்ந்து போனால் வாழ்க்கையில் எதனையும் சாதிக்க முடியாது தடைகள், சவால்களை வெல்லும் உறுதியுடன் இலக்கினை அடைய முன்வரவேண்டும். வெற்றிகளை மதிப்பீடு செய்ய வேண்டும், அடுத்த வெற்றிக்கு பாடசாலைகள் திட்டமிடவேண்டும். வெற்றிகளைக் கண்டு இறும்பூது கொள்வதும், தோல்வியைக் கண்டு மனம் உடைந்து போவதும் அடுத்த வெற்றிக்கான படிகளாக அமையாது. அதனைப் படிப்பினையாகக் கொண்டு எதிர்காலத்தை திட்டமிட வேண்டும்.

இலட்சியத்தோடு கற்றலில் ஈடுபடவேண்டும். எதிர்காலம் ஒளிமயமான தெனக் கொள்ள வேண்டும். பெற்றோர் பிள்ளைகள் படிக்கும் போது தொலைக்காட் சிப் பெட்டிகளை மூடி வைக்க வேண்டும். பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக தம்மைத் தியாகம் செய்ய வேண்டும். அவர்களின் எதிர்கால நல்வாழ்வே எமது நல் வாழ்வெனக் கொள்ள வேண்டும். பாடசாலைக்குச் சென்று பிள்ளையின் கற் றல் தொடர்பாகக் கலந்துரையாடப்படவேண்டும். தமது வருமானத்தில் சிறு தொகையாவது பாடசாலையின் அபிவிருத்திக்காக வழங்க முன்வரவேண்டும். அப்போதுதான் இப்பிரதேசத்தின் முழுமையான கல்வி அபிவிருத்தியினை எட்ட முடியும்.

**சின்னத்தம்பி குருபரன்**
முகாமையாளர்
ஆசிரியர் மத்திய நிலையம், பட்டிருப்பு வலயம்.

*With compliments from*

**K.T. றவே பாம்ஸ் ஹவுஸ்**




சகல விதமான விவசாய
கிருமிநாசினிகள் மற்றும்
விதை பொருட்கள், உர வகைகள்
என்பவற்றைப் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்

**K.T. றவே பாம்ஸ் ஹவுஸ்**
**பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை**
**077-5938061**

# நியூ துஷானி வீடியோ சென்டர்

* புதிய , பழைய திரைப்படங்கள்
* புதிய, பழைய பாடல்கள்
* இதிகாச புராணத் தொடர்கள் அடங்கிய இருவெட்டுக்கள்
* புறோக்கிறாம் தொடர்
* நம்பர் பிளேட்
* விசிட்டிங் காட்
* டிஜிட்டல் பிறிண்ட்
* லைட் வோட்
* ஆட்டோ, மோட்டார் வைக் ஸ்ரிக்கர் டிசைனிங்
* ஆட்வேர்க்



போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

# நியூ துஷானி வீடியோ சென்டர்

**மெயின் வீதி, கொக்கட்டிச்சோலை,**



சோக்கிறட்டீஸ் ஜெனிஸ்டன்
065-2251130, 0776321325,
075-2741250

*With compliments from*

# டனிஸ்ரா ஸ்ரோர்ஸ்

**பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.**

**077-9693864**

அனைத்து விதமான
பல்சரக்குப்
பொருட்களையும்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
மலிவான விலையில்,
தரமான
பொருட்களாகவும்
பெற்றுக்
கொள்ளலாம்.



# DANISTA STORE

**9th Vaddaram,**
**Kokkaddicholai, Batticaloa.**

சண் அச்சகம் - ✆ 065-2222597